595

595
3-

நாசப்பாதையிலே

W81
N50
112732

1A

நாசப் பாதையிலே..

சென்னை சர்க்கார்
செய்தி, விளம்பர இலாகா வெளியீடு
சென்னை
1950 :: விலை : நான்கணா

நாசப்பாதையிலே....

"தினை விதைத்தவன் தினையைத் தான் அறுப்பான்" என்பது நம் நாட்டுப் பழமொழி. தினையை விதைத்து விட்டு, பனையை எதிர்பார்ப்பது பைத்தியக்காரத்தனம். ஆனால், அத்தகைய விபரீதத்தை நம்புகிறவர்களும் எதிர்பார்க்கிறவர்களும் இல்லாமல் இல்லை. அவர்கள் வேறுயாரும் அல்ல. கம்யூனிஸ்டுகள் எனப்படுகின்றவர்கள்தான்.

"சர்வாதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு, அதன் விளைவாக சுதந்திரத்தை அடைய எண்ணுகின்றனர்; துவேஷத்தை வளர்த்து, அதன் பலனாக அன்பைப்பெற நினைக்கின்றனர்; பலாத்காரம், நாசவேலை ஆகிய சாதனங்கள் மூலம், நிரந்தர சமாதானத்தையும், சகோதர நேயத்தையும் நிலைநாட்

டக் கனவு காண்கின்றனர்.'' என்று இந்தக் கம்யூனிஸ்டுகளின் மாயாஜால வித்தையின் விபரீத தத்துவத்தை ஓர் ஆசிரியர் ரத்ன சுருக்கமாகக் குறிப்பிடுகின்றார். நம் நாட்டில் கம்யூனிஸ்டுகள் என்ற பெயரால் வழங்கப்படும் கூட்டத்தாரின் செயல்களை ஆராயும் போது, மேற்சொன்ன ஆசிரியரின் வாக்கு எவ்வளவு பொருத்தமானது என்பது நன்கு விளங்கும். இவர்கள் புரியும் பயங்கரச் சதிச் செயல்களுக்கு ஓரளவேயில்லை. நாட்டில் அமைதியைக் குலைத்து, குழப்பத்தை விளைவிக்க கங்கணம் கட்டிக்கொண் டிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

கம்யூனிஸ்டுகள் என்று சொல்லப்படும் கூட்டத்தார் புரியும் நாசச் செயல்களால் நாட்டில் அமைதி குலைவதோடு, மக்களின் சமூக வாழ்வும் சீர்

கெடுகிறது. புற்று நோயின் தன்மை எல்லோருக்கும் தெரியும். அது முதலில் உடலின் ஏதாவது ஓர் உறுப்பைத் தான் பற்றும். ஆனாலும் அதை முளையி லேயே கிள்ளி யெறியாவிட்டால், அந் நோய் நாளடைவில் உடலையே சீர் குலைத்து, கடைசியில் உயிருக்கே உலை வைத்துவிடும். மேற்கூறிய சமூக விரோ திகள் சிலர் செய்யும் பயங்கரச் செயல் கள், இத்தகைய புற்று நோயைப்போன் றது. சென்னை ராஜ்யத்தின் குறிப் பிட்ட சில பகுதிகளில் தான் தற் பொழுது இச் செயல்கள் நடைபெற்று வருகின்றன. ஆயினும், இவற்றை முதலிலேயே அடக்கி விடுவது அவசியம்.

அமைதிக்கும் அஹிம்சைக்கும் பேர் போன நமது நாட்டில் ஒரு சிறு கூட் டத்தார், நாகரீக மனிதரெவரும்

செய்யாத பல வெறுக்கத்தக்க சைத்தான் வேலைகளைச் செய்து வருகின்றனரென்பதைப் பத்திரிகைகளில் வரும் செய்திகளிலிருந்தே எளிதில் அறியலாம். முற்காலத்தில் பல கொடுஞ் செயல்களைப் புரிந்த பிண்டாரிகளையும் தக்கர்களையும் பற்றி நாம் சரித்திர நூல்களில் படித்துள்ளோம். ஆனால், இந் நவீன கொலைகாரக் கூட்டம் புரியும் பயங்கர அட்டூழியங்களையும் மனிதத் தன்மையற்ற கொடுஞ் செயல்களையும் கவனித்தால், சரித்திர காலத்துப் பிண்டாரிகளும் தக்கர்களும் வெட்கித் தலை குனிவார்கள் என நிச்சயமாகக் கூறலாம். இந்த நாசக் கூட்டத்தின் அகராதியிலே நற்செயலுக்கும் தீச் செயலுக்கும் வித்தியாசமில்லை. மனித உயிர் எதற்கு என்றால், அதற்கு இவர்கள் கொள்கையின்படி "அழிப்பதற்கு" என்று விடை காணலாம். "பொருள்

எதற்கு?'' என்று கேட்டால், "கொள்ளை அடிப்பதற்கு" என்று இவர்களது நீதி, கூசாது பதில் சொல்லும். "சமூகம் எதற்கு?'' என்று கேட்டாலோ, குழப்பத்தை உண்டாக்குவதற்குத்தான் என்று இவர்களது நன்னெறி நூல் விடையளிக்கிறது. ஏதாவது ஓரிடத்தில் சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் வாய்ப்பாக இருந்தால், அவற்றைப் பயன்படுத்திக் கொண்டு, குழப்பத்தை உண்டாக்கி, அமைதியைக் குலைத்து அராஜக நிலையை உண்டாக்கி, ஆட்சியதிகாரங்களைத் தாங்களே கவர்ந்து கொள்வதுதான் இவர்களது நோக்கம்.

நேர்மையுள்ள ஜனநாயக முறையில், மக்கள் நோக்கத்துக்கு ஆட்சியாளர் கட்டுப்பட்டவர்கள். ஆனல் நமது நவீன நாசக்காரர்கள் இந்த முறையைப் பின்பற்றுது, வேறொரு நூதன விபரீத

முறையைப் பின் பற்றுகிறார்கள். மக்களை அடிமைப்படுத்தி, தங்கள் சொற்படி அவர்களை ஆட்டுவிப்பதே, இவர்களது அரசியல் தத்துவம். இவர்கள் போக்கோ, மூர்க்கத்தனமாயிருப்பதோடு சட்ட விரோதமாயுமிருக்கிறது. தாங்கள் கொண்ட "இலட்சிய"த் துக்காக, தாங்கள் வெற்றி பெற, எத்தகைய இழிவான செயலையும் புரிய இவர்கள் கொஞ்சமும் அஞ்சுவதில்லை. வெறுக்கத் தக்க சட்ட விரோதமான நடத்தையிலும் இறங்குவதற்குத் தயங்குவதில்லை. நாட்டுப் பற்று இவர்களுக்கு உண்டென்றால் அப்பற்று தாய் நாட்டின் மீது அல்ல. தம் சொந்த நாட்டு மக்களிடமாவது அவர்கள் பற்று கொண்டவர்களா என்று பார்த்தால், அதுவும் இல்லை. மக்களிடம் பற்றிருந்தால் அவர்களைத் துன்பத்துக்குள்ளாக்குவார்களா? நாட்டு மக்கள் போற்றும் நமது

அரும் பெரும் தலைவர்களை, அவர்கள் துச்சமாக எண்ணுகிறார்கள். நாட்டுப் பற்று லவலேசமாவது இருந்தால்—இந் நாட்டு மக்கள் மீது சிறிதேனும் அன்பி ருந்தால்—நாட்டின் அமைதியைச் சீர் குலைத்து நாட்டின் முன்னேற்றத்தைப் பாழ்படுத்தும் வகையில் அவர்கள் கொடூ ரக் குற்றச் செயல்களைப் புரிவார்களா? இவர்கள் செயல்களினால் நாட்டின் அமைதி சீர் குலைவதோடு, நம் நாட் டின் சுதந்திரத்துக்கும் பங்கம் நேரி டக்கூடிய அபாயநிலைகூட ஏற்படும்.

இவர்கள் ஏழைகளுக்கு "விடுதலை" யளிப்பவர்களாம்! பாட்டாளி மக்களைப் பெரிதும் ஆதரிப்பவர்களாம்! அரசியல் அரங்கிலே எதிர்க் கட்சி வேடம் பூண்டு, பசுத்தோல் போர்த்த புலிபோல் இவர் கள் கொலைகள் பல புரிகின்றனர்.

கொள்ளையடிப்பது, கொள்ளி வைத்து வீடுகளைச் சாம்பலாக்குவது, சூறையாடுவது போன்ற பல நாசச் செயல்களை இவர்கள் சிறிதும் மனிதத் தன்மையில்லாது புரிந்து வருகின்றனர். சாதாரணக் குற்றவாளிகள் ஏதோ வறுமையினாலோ, உணர்ச்சி வேகத்தாலோ, சந்தர்ப்பவசத்தால் சட்டத்துக்கு விரோதமாக நடக்கின்றனர். ஆனால் இவர்கள் அத்தகையவர்கள் அல்ல. கொடுமையையே அடிப்படையாகக் கொண்ட திட்டத்தின்படி, கல்நெஞ்சுடன் இவர்கள் செயல் புரிகின்றனர். இத்தகைய திட்டத்தை மக்கள் வெறுப்பது திண்ணம்.

* * * *

சென்ற சில மாதங்களாக கம்யூனிஸ்டுகள் என்று சொல்லப்படுவோர் நம் மாகாணத்தில் புரிந்து வரும் இரக்கமற்ற "திருவிளையாடல்கள்" மிகப்பல.

நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் எதிரிக ளாகத் தோன்றியுள்ள இக் கூட்டத் தார் எவ்வளவு கொடூரத்துடன் அடுக் கடுக்காகப் பல குற்றங்கள் புரிந்துள் ளனர் என்பதற்கு, கீழ்க் குறிப்பிட் டுள்ள சம்பவங்களே சான்றாகும்.

கொடூரக் கொலை பாதகங்கள்

கிருஷ்ணா ஜில்லாவைச் சேர்ந்த திரூர், நூஜ்விட், ஆகிய தாலுக்காக் களில் உள்ள பத்து கிராமங்களைக் கம்யூ னிஸ்டுகள் எனப்படுவோர் 21—12—49 அன்று தாக்கினர். அன்றிரவு ஏழு கொலைகள் நடந்தன. கொலை செய்யப் பட்டவர்களில் மூவர் துப்பாக்கிக் குண் டுகளுக்கு இரையானார்கள்; இருவர் வேல் கம்புக்குப் பலியானார்கள்; மற்ற இருவர் கழுத்தறுபட்டுக் கொல்லப்பட்டனர். ஒரு வீடு தாக்கப்பட்டது. அவ்வீட்டி லுள்ளவர்கள் கடும் துப்பாக்கிப் பிர

யோகத்துக்கு இலக்காகினர். கடைசி யில் வீடே கொளுத்தப்பட்டது.

* * * *

1950 வருஷம், ஜனவரி 30-ம் தேதி யன்று, கிருஷ்ண ஜில்லாவைச் சேர்ந்த குடப்பாவில் வசிக்கும் நந்தூரி பேர ராஜு என்பவர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார். கொலைக்காரக் கும்ப லின் பழிவாங்கும் படலம் அத்துடன் நிற்கவில்லை. பேரராஜுவின் பத்து வயதுப் பையன் கூட அவர்கள் கோபத்துக்குள்ளாகி பலியானன். அப் பாலகன் செய்த பாவம் என்ன? அவன் தன் தகப்பனருக்கு அருகாமை யில் ஒரு கட்டிலின் மீது படுத்துத் தூங் கிக் கொண்டிருந்தான்! அந்தப் பாவத் திற்காக, அவன், வேல் கம்பினல் குத் தப்பட்டான். சாகுந் தருவாயில் நூஜ் விடுக்கு அவன் தூக்கிச் செல்லப்பட்ட போது வழியிலேயே அப்பச்சிளம் பால

கன் உயிர் துறந்தான். போலீஸுக்கு உளவு கூறுகிறவர் என்று போராஜுவைச் சந்தேகித்தார்களாம் அவரைக் கொலை செய்தவர்கள்! தந்தையின் செய்கைக்குத் தநயனும் பலியாக வேண்டும் போலிருக்கிறது! இதுதான் அவர்கள் நீதி!

* * * *

மேற்குறிப்பிட்ட சம்பவத்தைவிட மிகக் கோரமான சம்பவமொன்று ஹைதராபாத் எல்லையினருகே நடந்தது. அவ்வெல்லையைச் சார்ந்த கிராமங்களாகிய ஜனார்த்தனபுரத்திலும் நரசிம்ஹலகூடத்திலும் வாழும் மக்கள், 1949-ம் வருஷம் டிசம்பர் 30-ந் தேதியன்று இரவில் எட்டு கொலைகள் அவர்கள் கண்ணெதிரேயே நடப்பதைக் கண்டு தவிக்க நேரிட்டது. பெண் என்ருல் பேயுமிரங்கும் என்பார்கள். ஆனல் ஆண், பெண் என்ற பேதம் பாராட்

டாது சொன்றனர், சம உரிமை போதிக்கும் இச் சமத்துவ வீரர்கள்! இவர்களது கொடூரக் கொலை பாதகத்துக்கு இலக்கான எட்டு பேர்களில் ஐவர் பெண்கள். அவர்களில் ஒரு பெண் கர்ப்ப முற்றிருந்தாள். கர்ப்பத்திலிருக்கின்ற கருவும் இவர்களது இலக்கிலிருந்து தப்பவில்லை. இந்த நவீன கம்ஸர்களின் கொள்கைப்படி, கர்ப்பத்திலிருக்கும் சிசுக்கள்கூட கொல்லப் படவேண்டிய விரோதிகள்! 75 வயதுக் கிழவி ஒருவர் இவர்களால் அபாயகரமாக கருதப்பட்டார்! அவளையும் துப்பாக்கிக்கு இரையாக்கினர்கள், இந்த ரத்த வெறியாளர்கள். அந்தக் கிழவி தன் மகளின் இருப்பிடத்தைத் தெரிவிக்க வில்லையாம்! இது தான் அவள் செய்த குற்றம்!

* * * *

19—2—50ல் யன்று, கிருஷ்ணு ஜில்லாவைச் சேர்ந்த ஆதெபூடி கிரா

மத்தை, சுமார் 25 கம்யூனிஸ்டுகள் தடி கள் கொண்டு தாக்கினார்கள். அக் கிராமத்தைக் காவல் புரியும் காவலாளி களைத் தாக்கி, அவர்களில் ஏழு பேரைப் படுகாயப்படுத்தினார்கள். எங்கோ ஓரி டத்தில் முகாம் போட்டிருக்கும் போலீஸ் இன்ஸ்பெக்டர் பார்க்க விரும்புவதாய் பொய் சொல்லி, கிராமவாசி ஒரு வரை அழைத்துக் கொண்டு போய் விட்டனர். மறு நாட் காலை, கிராமத்துக் கருகிலுள்ள சாக்கடையில் அக் கிராம வாசியின் சவம் கிடந்தது.

* * * *

போலீசுக்கு உளவு கூறுபவர் என்று சந்தேகிக்கப்படுவரைக் கொல் வது இவர்கள் "புரட்சித்" திட்டத்தில் ஒரு அம்சம். இதன் பலனாக, கொடுமைக் காளாகி, கொலையுண்டவர் பலர். வேல்வடம் கிராமத்தைச் சேர்ந்த ஒரு

பாவமுமறியாத பள்ளிக்கூட ஆசிரியர் ஒருவர் இவ்வாறு கொல்லப்பட்டார். இவருக்குப் போலீசாருடனே அல்லது கம்யூனிஸ்டுகள் என்று சொல்லப்படும் கூட்டத்தாருடனே யாதொருவிதத் தொடர்புமில்லை. அவர் செய்த குற்றம் இதுதான்: வீட்டுத் திண்ணைமீது உட்கார்ந்து ஒரு சிறு விளக்கினருகில் புத்தகமொன்றைப் படித்துக் கொண்டிருந்தார். இவர் குத்தி கொல்லப்பட்டார். கம்யூனிஸ்ட் எதிரி எனச் சந்தேகிக்கப்பட்ட ஓர் ஆசாமியைப் போலிருந்தாராம் இவர், அந்த விளக்கின் மங்கின ஒளியில்! அதுதான் அவர் செய்த குற்றம்!!

* * * *

இரத்த வெறி கொண்ட இக் கூட்டத்தினர் கையாளும் முறைகளில் நியாயம், நீதி, ஈவு, இரக்கம் என்பது கிடை

யாது. பழி தீர்ப்பதற்காக ஒரு குடும்பத்தையே பூண்டோடு அழித்துவிட அவர்கள் தயங்குவதில்லை. தாங்கள் குறி வைத்த ஆசாமியின் குடும்பத்தைக் கூண்டோடு கைலாசம் அனுப்பும் துணிவு இவர்களுக்கு உண்டு. கடந்த பிப்ரவரி மாதம் 21-ந் தேதியன்று குண்டூர் ஜில்லாவைச் சேர்ந்த கிராமமொன்றிலுள்ள கர்ணத்தைப் பழி வாங்கத் தீர்மானித்தார்கள். அதன் விளைவாக, அந்தக் கர்ணத்தின் குடும்பத்தினர்களனைவரும் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையானார்கள். அந்த வீட்டிலிருந்த பெண்மணிகூட கொலையுண்டார்—அந்த அம்மணி கர்ணத்தின் மனைவி என்ற குற்றத்துக்காக! கர்ணத்தின் மகன் ஒரு கல்லூரி மாணவன்; கொலைகாரர்களிடம் அவன் தன் உயிருக்காக மன்றாடினான். அவ்வாறு மன்றாடியும் அவனைப் பலியிட்டார்கள் பாதகர்கள். அது மட்

டுமா? கர்ணத்தின் வீட்டுத் திண்ணையில் தூங்கிக் கொண்டிருந்த ஹெட் கான்ஸ்டேபிள் ஒருவருக்கும் இதே கதி நேர்ந்தது.

* * * *

3—8—48உ யன்று, கிழக்கு கோதாவரி ஜில்லாவில் ஒரு கிராம முனிசிப் வேல் கம்பினல் தாக்கப்பட்டு உயிரை இழந்தார். ரூபாய் 6,000 மதிப்புள்ள ரொக்கப்பணத்தையும் நகைகளையும் சூறையாடிக் கொண்டு போனர்கள்.

கொலைக்கு அஞ்சாத இக் கூட்டத்தார் பிற மக்கள் சொத்தை மதிப்பதில்லை. அதாவது இவர்கள் நியதிப்படி "சொத்து" என்பது, பிறருக்கு இருக்கக் கூடாது; சொத்தெல்லாம் தாங்கள் சூறையாடுவதற்குத்தான் என்பது இவர்களின் மேம்பட்ட கருத்து. ஆண்களையும் பெண்களையும் கொன்று குவித்து,

குருதி ஆற்றிலே நீந்தி, பலாத்காரக் கொடுஞ் செயல்கள் பல புரிந்து பிறர் சொத்தை சூறையாடுவதே இவர்கள் இலட்சியம் போலும். இதுதான் சொத்தைச் "சமபங்கீடு" செய்யும் முறை போலும்! இம்முறையை இவர்கள் எப்படிக் கடைப்பிடிக்கிறார்கள் என்பதைக் கீழ்க் காணும் சம்பவங்கள் எடுத்துக் காட்டும் :—

முன்பு கூறப்பட்ட நூஜ்வீட் கிராமங்களிலே, இக் கூட்டத்தார் சுமார் ரூபாய் 1,40,000 ரொக்கத்தையும் நகைகளையும் கைப்பற்றினர். சில துப்பாக்கிகளையும் தோட்டாக்களையும் கூட இவர்கள் அங்கு கைப்பற்றினர். 11-3-1950 அன்று ரூபாய் 47,000த்தைக் கொள்ளையடித்தார்கள். 21-12-1949 தேதியன்று பெண்களிடமிருந்து நகைகளைப் பலாத்காரமாகப் பிடுங்கிப் பறிமுதல் செய்

தனர். பெண்கள் தாலியைக் கூட விட்டுவிடவில்லை. நம் நாட்டு மங்கையர்கள் உயிரெனப் போற்றும் புனிதமான தாலியும் இவர்கள் கொள்ளைக்கு விதி விலக்காகவில்லை.

* * * *

மேற்கு கோதாவரி ஜில்லாவைச் சேர்ந்த காஞ்சிமனு கிராமத்திலுள்ள கிராம முன்சீப் மீது கம்யூனிஸ்டுகளுக்கு விரோதமாம். ஆகவே, 15-1-50 அன்று, அவரது வீடு நள்ளிரவில் தாக்கப்பட்டது. அப்போது நல்ல வேளையாக அந்த கிராம முன்சீப் தன் வீட்டில் இல்லை. வீட்டைத் தாக்கியவர்களுக்கு ஆத்திரம் வராதா? அதன் விளைவாக, வீட்டிலிருந்த மரச் சாமான்களையும் இன்னும் இதர சாமான்களையும் போட்டு உடைத்துத் தூளாக்கித் தங்களது வஞ்சத்தை தீர்த்துக் கொண்டனர். வீட்டிலிருந்த ரொக்

கொலை "கைங்கரியம்"

......நாசகாரக் கூட்டத்தினர் இவரை கழுத்தில் சுருக்குப் போட்டுக் கொன்றனர். இச் சம்பவம், கிருஷ்ணா ஜில்லாவைச் சேர்ந்த கிழக்கு முர்ராமரம் கிராமத்தில் நடந்தது.

☆

பழிகாரருக்குப் பலி

......இந்தக் கிராமவாசிகளை ஊருக்கு வெளியே அழைத்துச் சென்று அவர்கள் கழுத்தை அறுத்தனர்.





கொள்ளி ‘ தர்மம் ’

இம்மாதிரி வீடுகளுக்குத் தீயிட்டு நாசமாக்குவதால்......ஏழை மக்கள் வீடின்றி தவிக்க நேரிட்டது.

☆

கொள்ளை ‘ நீதி ’

இவ்வறையிலிருந்த மதிப்புள்ள சாமான்கள் கொள்ளையடிக்கப்பட்டன. இதர சாமான்கள் நொறுக்கப்பட்டன.

கப்பணத்தையும் நகைகளையும் விட்டுப் போவானேன் என்று அவற்றைக் கைப்பற்றிச் சென்றனர். நாற்காலிகளையும் கட்டில்களையும்கூட அவர்கள் தூக்கிச் செல்லாததற்குக் காரணம், அவை பளுவாயிருந்ததுதான்! அதற்காக அவற்றை அப்படியே விட்டுப் போகலாமா? அவற்றைத் தூளாக்கி விட்டுத்தான் போனார்கள்!

*   *   *   *

மக்களுக்கு எந்தெந்த விதத்தில் நஷ்டத்தை உண்டாக்கி அவர்களைத் துன்புறுத்துவது என்ற அரிய கலையில் கைதேறியவர்கள் இக் கூட்டத்தார். ஏழைகள் பட்டினியால் வாடுகிறார்கள் என்று ஒரு பக்கம் அங்கலாய்ப்பார்கள். துன்பப்படும் மக்களது அன்பர்கள் என்று இவர்கள் நடிப்பார்கள். ஆனால், செய்வது என்ன? மறு பக்கம்

நூற்றுக்கணக்கான மக்களது பசிப் பிணியைப் போக்கவல்ல அரிய உணவுப் பொருள்களையெல்லாம் நாசம் செய்வார்கள். கிருஷ்ணா ஜில்லாவிலே நடந்த ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிடலாம். கதிர்களிலிருந்து நெல்லைப் பிரித்தெடுப்பதற்காக, களத்தில் அக் கதிர்களைச் சேகரித்து வைத்திருந்தனர் கிராமத்தினர். நாசகாரக் கூட்டம், இந்த மக்கள் உணவுக்கு தீ வைத்து அடியோடு அழித்தனர். மக்களுக்கு உணவில்லை என்று முதலைக் கண்ணீர் வடிக்கும் இவர்கள், உணவுப் பொருள்களை நாசமாக்கப் பின் வாங்குவதில்லை.

*   *   *   *

தனிப்பட்டவர் சொத்தையாவது மதிக்காமற் போகட்டும். ஆனல் பொது மக்கள் சொத்தைக் கூடவா இவர்கள் பாழ்படுத்தவேண்டும்? பொதுச் சொத்

துக்களையும், இவர்கள் நாசவேலைக்கு இலக்காக்குவதுதான் வெறுக்கத்தக்கது. அஹிம்சாமூர்த்தி மகாத்மாவின் உயிரற்ற உருவச்சிலைகூட இவர்களது தீச் செயலுக்குத் தப்பவில்லை. 1949-ம் ஆண்டு—செப்டம்பரில் கம்யூனிஸ்டு கட்சி சட்ட விரோதமானதென்று சென்னை ராஜ்யத்தில் உத்தரவு பிறந்தது ஞாபகமிருக்கலாம். அப்போது திருச்சிராப்பள்ளியில் புதிதாக எழுப்பப்பெற்ற காந்திஜியின் உருவச்சிலையை உடைத்து, தங்கள் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டார்கள் இந்த மகானுபாவர்கள்.

* * * *

திராவக பல்புகள், நாட்டு வெடிகுண்டுகள், வேல் கம்புகள், குண்டாந்தடிகள் இத்தகைய ஆயுதங்கள் தான் இவர்களின் இலட்சியத்தைப் பரப்பும்

கருவிகள்! கற்கள், உடைந்த மரத் துண்டுகள் முதலியவற்றை பைத்தியக் காரர்கள் மற்றவர்கள் மீது எறிவதை எல்லோரும் பார்த்திருப்பார்கள். ஆனல் நம் நாட்டிலுள்ள கம்யூனிஸ்டுகள் எனப் படும் கூட்டத்தினர் தங்களது செய்கை களின் மூலம் பைத்தியக்காரர்கள் செயல்களையும் மிஞ்சி விட்டார்கள். கைக்கு அகப்பட்டதை வீசுவதில் இவர் கள் வீரர்கள்!

நாச வேலைகள்

கம்யூனிஸ்டு கிளர்ச்சியாளர்கள் எனப்படுவோர் கையாளும் பயங்கர முறைகளில் நாச வேலை மிகவும் முக்கிய மானது. ரயில் வண்டிப் போக்குவரத் தில், இவர்கள் புரிந்த நாச வேலைகளின் காரணமாக, ஒரு பாவமுமறியாத நூற் றுக் கணக்கான மக்கள் உயிரிழக்க நேரிட்டது. அவ்வாறு உயிரிழந்த மக்

கள் ஒருவிதத் தவறையும் செய்யவில்லை; கம்யூனிஸ்டுகளைப் பற்றி அவர்கள் சிந்தனை கூடச் செய்திருக்கமாட்டார்கள். ஆனால் நாச வேலைகளின் காரணமாக ஏற்பட்ட ரயில் விபத்துகளிலிருந்து தப்பிப் பிழைத்தவர்கள் கம்யூனிஸ்டுகள் எனப்படும் கூட்டத்தினரை ஆயுள் பூராவும் மறக்காமலிருப்பதற்கு காரணமுண்டு. நாசச் செயல்களின் விபரீதங்கள் பலவற்றைப் பற்றிய செய்திகள், இப்பொழுது அடிக்கடி பத்திரிகைகளில் வெளி வருகின்றன. இந்நாசச் செயல்களின் விளைவாக உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் ஏற்பட்டிருக்கின்றன என்பதையும் பத்திரிகைகளில் படிக்கிறோம்.

இத்தகைய நாசச் செயல்களினால் எம். எஸ். எம். ரயில்வேயில் ஒரு பெரிய விபத்தும், தென்னிந்திய ரயில்வேயில்

இரு விபத்துகளும் ஏற்பட்டுள்ளன. மொரப்பூர் சந்திப்பில் 5-12-49-ந் தேதியன்று முதல் விபத்து நடந்தது. தூத்துக்குடியினருகில் 17-2-49-ந் தேதியன்று இரண்டாவது விபத்து நடந்தது. மொரப்பூரினருகில் கொச்சி எக்ஸ்பிரஸையும், தூத்துக்குடியினருகில் ஒரு பாசஞ்சர் வண்டியையும், கவிழ்க்கவே நாசக்காரக் கும்பல், பலத்த முயற்சிகளைச் செய்தது. ஆனால் அதிர்ஷ்ட வசமாய் இந்த விபத்துகளால் உயிர்ச் சேதம் ஏற்படாமல் தடுக்கப்பட்டது. மொரப்பூர் சம்பவம் நடந்த நாளன்று தான், சில தினங்களுக்கு முன் ரத்து செய்யப்பட்டிருந்த ஒரு கூட்ஸ் வண்டி ஓட ஆரம்பித்தது. கொச்சி எக்ஸ்பிரஸுக்காகக் கம்யூனிஸ்டுகள் போட்டிருந்த சதிக்கு இந்த கூட்ஸ் வண்டி பலியாகியது. சம்பவம் நடந்த இரவன்று ரத்து செய்யப்பட்ட கூட்ஸ் வண்டி மட்



உணவைப் பறிக்கும் 'நியாயம்'

...உணவுத் தானியங்களை தாங்கிய ரயில் வாகன்கள் கவிழ்க்கப்பட்டால், மக்கள் பட்டினியால் வருந்த நேரிடுகிறது.

யாருக்கு நஷ்டம்?

...நாசவேலையின் காரணமாக, ரயில் வாகன்கள் கவிழ்க்கப்பட்டன. மதிப்புமிக்க பொருள்களும் உணவுத் தானியங்களும் பாழாயின. இதனால் நஷ்டமும் கஷ்டமும் அனுபவிப்பவர்கள் பொதுமக்கள்தாம்!





கூளூர்பேட்டை விபத்து

நாசவேலையினலேற்பட்ட இவ்விபத்தில் பொது மக்களுக்குப் பெருத்த பொருள் நஷ்டம். பலர் படுகாயமுற்றனர்.

☆

கல்கத்தா மெயில் கவிழ்ந்தது

ரயில் வாகன்கள் சுக்கு நூருயின....உயிர்சேதம் வேறு.

டும் மீண்டும் அந்த ரயில் பாதை மீது ஓடியிராவிட்டால், என்ன நேர்ந்திருக்கும்? கொச்சி எக்ஸ்பிரஸ் கவிழ்ந்து பல உயிர்கள் சேதமாயிருக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

* * * *

தூத்துக்குடி சம்பவம் எப்படி நிகழ்ந்திருக்கிறது என்பதைப் பார்ப்போம். தூத்துக்குடிக்குப் போகும் கூட்ஸ் வண்டியும், தூத்துக்குடியிலிருந்து வரும் பாசஞ்சர் வண்டியும் மீளவிட்டான் ரயில்வே ஸ்டேஷனில் சந்திப்பது வழக்கம். பாசஞ்சர் வண்டி மீளவிட்டானை நோக்கி வரும் சமயம் பார்த்து, ரயில் பாதை நாசப்படுத்தப் பட்டது. ஆனால் அன்றிரவு மீளவிட்டானிலே பாசஞ்சர் வண்டி வரும்வரை வழக்கமாகத் தாமதித்திருக்க வேண்டிய கூட்ஸ் வண்டித் தொடரில் வழக்கத்துக்குப் புறம்பாக அன்றைய தினத்

தன்று அதிகமான வண்டிகள் பொருத்தப்பட்டிருந்ததால், மீளவிட்டான் ஸ்டேஷனில் அத்தொடர் நிற்பதற்குத் தகுந்த வசதியில்லாது போயிற்று. ஆகவே, அந்த கூட்ஸ் வண்டி, தூத்துக்குடியிலிருந்து பாசஞ்சர் புறப்படுவதற்கு முன்னமேயே, தூத்துக்குடி நோக்கி புறப்பட வேண்டியதாயிற்று. இதன் விளைவாக நாசக் கூட்டத்தார் வைத்த இலக்கில், பாசஞ்சர் வண்டிக்குப் பதில் கூட்ஸ் வண்டி விழ நேரிட்டு, அதன் விளைவாக அது தண்டவாளத்தை விட்டகன்றது.

* * * *

3-3-50-ந் தேதியன்று, சூளூர்பேட்டையினருகே ஏற்பட்ட கல்கத்தா மெயில் விபத்தை மறக்க முடியாது. இவ்விபத்தினல் பொருட் சேதம் மிக அதிகமாக ஏற்பட்டது. ஆனல், நல்ல வேளையாக

உயிர்ச்சேதம் மிகக் குறைவுதான். காயமுற்றவர்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவாகவே இருந்தது. இவ் விபத்தினல் பொருட் சேதத்துக்குத் தக்கவாறு உயிர்ச் சேதம் ஏற்பட்டிருந் தால், சமீபத்தில் பீஹாரில் ஏற்பட்ட பஞ்சாப் மெயில் விபத்தின் விளைவை விடப் பன்மடங்கு மோசமாக இது இருந்திருக்கும்.

* * * *

இக் கூட்டத்தார் மேலே கூறிய வாறு, மனித உயிருக்கு உலை வைத்து மற்றவர்களுடைய பொருள்களைச் சூறை யாடி வரும்போது, சிறைகளுக்குள்ளிருக் கும் அவர்களது தோழர்களோ சிறை விதிகளை உடைப்பதில் ஈடுபட்டுள்ளனர். அதோடு நிற்கவில்லை. அவர்கள் சிறைச் சாலை நாற்காலிகள், மேஜைகள் முதலிய சாமான்களை உடைத்தெறிவதில் ஈடுபட்

டனர். இன்னும் இவர்கள் சிறைக் காவலாளிகளைத் தாக்கவும் ஆரம்பித்துவிட்டனர். அவர்களது லட்சியங்களில் வெற்றிகாண, அவர்கள் வரையறுத்த விபரீதப் போர் முறைகளில் மேற்கூறிய அடாபிடி செயல்களும் முக்கியத்துவம் வகிக்கின்றன. சிறைச் சாலைகளில் கிளர்ச்சியை யுண்டாக்குவது அவர்கள் வகுத்திருக்கும் திட்டங்களில் ஒன்றாகும். கடலூர், சேலம், மதுரை முதலிய சிறைச்சாலைகளில் கிளர்ச்சிகள் நடைபெற்றன. இவற்றின் விளைவாக, பெருத்த அளவில் பொருட் சேதமேற்பட்டது. சர்க்காருக்கு இதனல் நஷ்டம். அந்த நஷ்டம் பொது மக்களைச் சார்ந்ததுதான். கம்யூனிஸ்டுகள் எனப்படும் காவற் கைதிகள், சிறைச்சாலையில் தங்களுக்குச் சௌகரியங்கள் பல செய்து கொடுக்க வேண்டுமென்று கூப்பாடு போடுகின்றனர். சர்க்கார் சகல சலுகை

களையும் அளித்தால், அச் சலுகை களையே, துஷ்பிரயோகம் செய்து, சிறையில் கலகம் ஏற்படுத்தப் பயன் படுத்திக் கொள்கின்றனர். நாற்காலி, முக்காலி, பல்புகள் இன்னும் இதர சாமான்களெல்லாம் சிறைக்காவலாளிகள் மீது வீசுவதற்கு உபயோகப் படுகின்றன.

'நாங்கள் அரசியல் கைதிகள். எங்களைக் கண்ணியமாக நடத்த வேண்டும்' என்று கூப்பாடுபோடுகிறவர்கள், சிறையில் கைதிகளாயிருக்கும்போதாவது கண்ணியமாகநடந்துகொள்ளவேண்டும்.'உரிமைகள் வழங்கியாக வேண்டும்' என்று இவர்கள் ஒரு பக்கம் கூக்குரல் எழுப்புவார்கள். உரிமைகள் கிடைத்தபிறகோ, இவர்கள்சிறைக்கட்டுப்பாடுகளைத்தகர்த்தெறிவதிலும் சிறை விதிகளை மீறுவதிலும் கண்ணுங் கருத்துமாயிருப்பார்கள். 'நாற்காலி வேண்டும்' என்பார்கள். நாற்

காலி கொடுத்தால், அதை ஒடித்து அதன் கால்களேயும் கைகளேயும் சிறைக் காவலாளர்மீது பிரயோகம் செய்கிருர்கள்.

* * * *

அடாபிடித்தனமிக்க இக் கூட்டத்தார் எத்தகைய முரட்டுத்தன முறைகளேப் பின்பற்றியிருக்கின்றனர் என்பதை, மேலே விவரித்துள்ள 'வீரச் செயல்கள்' மிகத் தெளிவாக எடுத்துக் காட்டும். இவர்களது இலட்சியம் எப்படியாவது இருந்து போகட்டும. ஆனல், இவர்கள் செயல்களும் முறைகளும் நேர்மையானவையா என்று யோசிக்க வேண்டும். எந்த நாகரீக நாடாவது, சமூகமாவது அல்லது சர்க்காராவது இவர்களது முறைகளே அனுமதிக்க முடியுமா? அல்லது இவர்கள் புரியும் அட்டூழியங்களே மக்கள் சகித்துக்

கொண்டிருப்பார்களா? எத்தகைய குற்றமாயிருப்பினும், அது அரசியல் சம்பந்தமானதாயிருந்தாலும் அல்லது தனி நபரது உரிமையைப் போக்கடிக்கக் கூடியதாயிருந்தாலும், அக் குற்றத்தைச் செய்தவனைத் தண்டிப்பது சர்க்காரது கடமை; ஆனல், மக்களுக்கும் இதில் பெரும் பொறுப்பு உண்டு. அதன் படி, அவர்களும் தங்கள் சர்க்காருடன் ஒத்துழைத்து நாட்டில் அமைதியை நிலை நாட்ட முன் வர வேண்டும். அவர்கள் தங்களையே பாதுகாத்துக் கொள்வதுடன், தங்களுடைய பொருளுடைமைகளையும் பாதுகாக்க வேண்டும். அவர்கள் உயிரையும் உடைமைகளையும் பறிப்பதற்காகப் பிறர் செய்யும் சட்ட விரோதமான செய்கைகளை, சட்டத்துக்குட்பட்ட வகையில் எதிர்த்து நிறுத்த அவர்கள் முன் வரவேண்டும். போலீஸ் உதவி உடனுக்குடனே அளிப்பதற்கிய

லாத வகையில், நாட்டின் உள் பிரதேசங்களில் அடங்கிக் கிடக்கும் கிராமங்கள் அநேகமிருக்கின்றன. அவற்றிலுள்ள மக்கள் இந்த நாசக்காரர்களின் தாக்குதல்களை எதிர்த்துப் போராட முன் வரவேண்டும். அவ்விதம் வருவது, அவர்களது கடமையும் பொறுப்புமாகும். இதன் மூலம், அவர்கள் சர்க்காருக்கும், நாட்டுக்கும் அரிய சேவையைச் செய்வது மட்டுமல்லாமல், தங்கள் சொந்த உடைமைகளை காப்பாற்றிக் கொள்ள முடியும். கொலை, கொள்ளை, சூறை, தீயிடல் முதலிய கொடூரச் செயல்களைப் புரிபவர்கள், ஆண், பெண், குழந்தைகள் என்ற வித்தியாசம் லவலேசமும் பாராட்டாது பல கொடுஞ் செயல்களை புரிந்து வருகிறார்களென்பது நினைவிலிருக்கட்டும். அவர்கள் ஏழைகளது தோழர்கள் அல்ல, மக்களது நண்பர்களுமல்ல; உண்மை

யில் பார்க்கப் போனல் அவர்கள் தேசத் துரோகிகள்; பொது மக்களின் எதிரி கள். ஆகவே, அவர்கள் உங்களுடைய எதிரிகள். அவர்களைப் பற்றி நாம் இனி ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். அவர்களது அக்கிரமங்களுக்கும் அட்டூழியங்களுக்கும் இந் நாட்டில் இனி இடமில்லை என்பதை நாம் உணர்த்துவோம். சமூகத்தைச் சீர்குலைக்கிற இக் கும்பலை எதிர்த்துப் போராட ஒன்றுபடுவோம். இக் கும்பல் நம் நாட்டில் இனி நாசச் செயல்களைப் புரிய இடங் கொடோம். எதையும் அழிப்பதையே நோக்கமாகக் கொண்ட இந்த சமூக விரோதிகளுக்கு எந்த விதமான ஆதரவுமளிக்கமாட்டோம் என உறுதி கொள்வோம். நாட்டை நாசப் பாதையினின்று காக்க திடம் கொள்வோம்.

நமது தலைவர்கள்
சொல்வது:

நமது அரும்பெருந் தலைவர் பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு:

'இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர் இந்தியாவில் பரப்ப விரும்புவது கம்யூனிஸக் கொள்கையல்ல. எந்த நாடும், ஏன், எந்தத் தனி மனிதனுங் கூட, ஆதரிக்க முடியாத ஒரு கீழ்த்தரமான கொள்கையை இவர்கள் பின்பற்றுகிறார்கள். இக் கொள்கை சரியான கம்யூனிஸத்தைப் பிரதிபலிப்பதாக விருந்தால், நான் இதை எதிர்க்கவே மாட்டேன். ஆனல், இவர்களது கம்யூனிஸக் கொள்கையோ இந்தியாவுக்காவது, இந்திய

மக்களுக்காவது எவ்வித நற்பலனையும் கொடுப்பதாயில்லை. இந்தியாவை ஒரு பல மற்ற நாடாக்குவது தான் இவர்களது நோக்கம். அவர்கள், நாட்டில் குழப்பத்தை உண்டுபண்ணி, வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஏழ்மையையும் அதிகரிக்கச் செய்யும் நோக்கங் கொண்டுள்ளார்கள். அவர்கள் கூறும் விளக்கங்களிலிருந்தே இது தெளிவாகத் தெரிகிறது. இதனால் நாட்டில் ஒரு தலைமுறைக்காவது ஏழ்மை தலைவிரித்தாடுமென்பது திண்ணம். அவர்கள், தற்பொழுது கையாளும் முறைகள் மூலம் நாட்டில் பெருத்த பஞ்சமும், பொருளழிவும் ஏற்பட்டு, அவற்றின் விளைவாக நெருக்கடியான நிலைமை உண்டாகுமென்றும், அச் சந்தர்ப்பம் பார்த்து மக்களைத் தூண்டி, பெருத்த புரட்சியை உண்டாக்கி விடலாமென்றும் எண்ணுகிறார்கள்.

*   *   *   *

"இவ்வாறாக இவர்கள் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால், இவர்

கள் எண்ணுவது போல் ஏற்படும் நெருக்கடி நிலைமைகளால் புரட்சி தோன்றி விடாதென்பதைச் சரித்திரம் எடுத்துக் கூறுகிறது. அதாவது, புரட்சிக்குப் பதிலாக, ஹிட்லரிஸம், பாஸிஸம் போன்ற எதேச்சாதிகார சக்திகளே உருக்கொள்ள முடியும். வெடிகுண்டு வீசுபவன், தன்னை ஒரு புரட்சிக்காரனாக எண்ணிக் கொள்ளலாம். ஆனால், அவன் தன் லட்சியத்தை நிறைவேற்றுவதில் தோல்வியுறுவான். ஆனால், காந்திஜியைப் போன்ற அகிம்சா வாதிகள், மக்களின் மனப்பாங்கை மாற்றுவதன் மூலம், பலத்த புரட்சியைச் செய்து காட்ட முடியும். ஆதலால், புரட்சிக்காக உண்மையில் பாடுபடுபவர்கள், நாட்டின் நிலைமையைச் சரிவர ஆராய்ந்து, மக்களது மனப் போக்கையும் கவனித்து, அவற்றிற்குத் தகுந்தவாறு தமது திட்டங்களை மாற்றி யமைத்துக் கொள்ள வேண்டும்.

* * * *

'கம்யூனிஸ்ட் கொள்கைகள் பலவற்றில் நான் பற்றுகொண்டவன். இன்றுள்ள

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினரோ, ஒரே குழப்பக் கட்சியினர்; அவர்கள் கம்யூனிஸக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புறக் கணித்துள்ளனர் என்பதை நான் இங்கு கூற விரும்புகிறேன். பயங்கரச் செயல்களால் குழப்பத்தை உண்டாக்கி, இந்தியாவைத் துண்டு துண்டாக்கி விட வேண்டுமென்ற ஒரே நோக்கத்தைத் தவிர, இக்கட்சிக்கு வேறெந்த விதமான கோட்பாடோ, இலட்சியமோ கிடையாது என்பதை நான் நிச்சயமாகக் கூறுவேன். இந்த மாதிரியான அடாபிடிச் செயல்களைக் கண்டு எந்த சர்க்காரும் சும்மா விருக்காது. சொல்லப்போனல், கம்யூனிஸ்ட் சர்க்காரே கூட இச்செயல்களைச் சகிக்கமாட்டார்கள். சென்னையிலும் இதர சில ராஜ்யங்களிலும் கம்யூனிஸ்ட் கட்சி சட்ட விரோதமான கட்சியென அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனல், இந்தியாவின் பெரும்பகுதியில், இக் கட்சி சட்ட விரோதமானதல்ல. அவ்விதமிருப்பினும் நாங்கள் வேறு வழியில் இக்கட்சியின்

மீது தக்க எதிர் நடவடிக்கைகள் எடுக்கிறோம் என்பதில் சந்தேகமேயில்லை. ஆனாலும், இந்தியாவில் பயங்கரச் செயல்களில் ஈடுபடும் ஸ்தாபனங்களை, மிகுந்த தாட்சண்யத்தோடு நடத்துகிறோமென்பதை நான் உறுதியாகக் கூறமுடியும். வேறெந்த நாட்டிலும் இந்த ஸ்தாபனங்களுக்கு இத்தகைய சந்தர்ப்பங்களில் இந்த அளவுக்கு தாட்சணியம் காட்டப்பட்டிருக்காது.''

—1950, ஜூன் மாதத்தில் திருவனந்தபுரத்தில் செய்த சொற்பொழிவின் ஒரு பகுதி.

'இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை, பலாத்காரத்தையே அடிப்படையாகக் கொண்டது; மற்றும், தொழிலாளர்கள் உழவர்கள் முதலியோரின் பொருளாதார அபிவிருத்திக்கும், இவர்களுடைய கொள்கைக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது. இதில் கொஞ்சமும் சந்தேகமே இல்லை. அக்கட்சியின் கொள்கை, நாட்டிலே குழப்பத்தையும் கலவரத்தையும் உண்டாக்குவதுதான். அம்

மாதிரியான கொள்கை வெற்றிபெற வில்லை என்றால், அதற்கு அக்கட்சியின் மேல் தவறு இல்லை. உண்மையில் அவர்களுக்கு இப்பொழுதெல்லாம் தோல்வி மேல் தோல்வி தொடர்ந்து ஏற்பட்டிருக்கிறது. ஆகையால், இனிமேல் என்ன செய்வது என்று அறியாது சோர்வடைந்து ஏங்கி நிற்கின்றனர், என்று நான் நினைக்கிறேன். ஹைதராபாத், ஆந்திரா எல்லைப் பிரதேசங்கள் ஆகிய இடங்களில் இவர்கள் தங்களது கைவரிசைகளைக் காட்டினார்கள். ஏன்? வங்காளத்தில் கூட ஏதோ சில பகுதிகளில் தங்கள் திருப்பணிகளைப் புரிய முயற்சித்தனர். முயற்சித்தும் வருகின்றனர். ஏதோ சில இடங்களிலே சிறு குழப்பங்களை இவர்கள் உண்டாக்கலாம். ஆனால், இவை காரணமாக, சர்க்கார் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது ஒரு புறம் இருக்க, அவர்கள் பொது மக்களின் கோபத்துக்கு உள்ளாகிறார்களென்பது திண்ணம்.

—டில்லியில் நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் கூட்டமொன்றில் பேசியதிலிருந்து ஒரு பகுதி.

உபப்
பிரதம மந்திரி,
சர்தார் பட்டேல்

'கம்யூனிஸம் என்ற மதிப்பு வாய்ந்த கொள்கையின் பெயரால், எந்த ஒரு இளைஞனும் தன் இஷ்டம்போல், கொலை கொள்ளை ஆகியவற்றைப் புரிய இடங் கொடுக்கக் கூடாது. இது நிச்சயம் தடுக்க வேண்டிய காரியமாகும். ஏனெனில் கம்யூனிஸம் என்ற பெயரே அதற்குப் பொருந்தாது. இங்கு ஒரு சிலர் கம்யூனிஸ்டுகள் எனக் கூறப்படுகிறார் கள். உண்மையில், இவர்கள் கம்யூனிஸ்டு

களேயல்ல. கம்யூனிஸ்டுகள் என்றழைக்கப் படுவதற்குக் கொஞ்சமும் அருகதையற்றவர் கள் இவர்கள். 'கம்யூனிஸ்ட்' என்ற அரசி யல் சொல்லுக்குரிய யோக்கியதை இவர் களிடம் இல்லவேயில்லை. கம்யூனிஸம் என் பது ஒரு கொள்கை. ஆனல் இந்தியாவில் கையாளப்படும் கம்யூனிஸக் கொள்கையோ, ஒரு தனி ரகத்தைச் சேர்ந்ததாக இருக்கி றது. இங்கிலாந்திலும் கம்யூனிஸம் உண்டு; ஆனல் அங்கு அதைப் பின்பற்றுவோர், கொள்ளையடிப்பதோ, கொலை செய்வதோ கிடையாது; போக்குவரத்து சாதனங்களை அவர்கள் பாழ்படுத்துவதும் இல்லை. ஆனல், இங்கு இதற்கு நேர்மாருன காரியங்கள் நடைபெறுவதைக் காண்கின்ருேம். சில தண்டவாளங்களை அகற்றினல், எவ்வளவு பேர் உயிரிழக்க நேரிடுகிறது? இம்மாதிரிச் செயல்களைப் புரிபவர்களைச் சும்மா விட்டு விடுவதா? நமக்குப் பொறுப்பு என்பது கிடையாதா?

* * * *

'இந்தியா பூராவிலும் போடப்பட்டுள்ள போக்குவரவுப் பாதைகளனைத்தையும் போலீஸ்காரர்கள் பாதுகாக்கமுடியும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால், அதே சமயத்தில்,போக்குவரத்து சாதனங்கள் சீர்குலைக்கப் படுவதை அனுமதிக்க இயலாது. நம் நாட்டுப் போக்குவரத்துச் சாதனங்கள் சீர்குலைக்கப்பட்டால், வெளி நாடுகளில் நமது பெருமை என்ன ஆவது ? இச் சாதனங்கள் நாசப்படுத்தப்பட்டால், வர்த்தகம், கைத்தொழில் யாவும் பாதிக்கப்படுவதோடல்லாது, உணவுப் பொருள்களின் போக்குவரத்தும் தட்டுப்படுகிறது. இதன் விளைவு என்ன ? நீங்கள் எல்லாரும் சுதந்திர மக்களாய் வாழ்வதற்குத் தகுதியற்றவர்களென முடிவு கட்டப்படும்.

* * * *

" கம்யூனிஸத்தை நாம் பகைக்க வில்லை. கம்யூனிஸக் கொள்கைகள் மீது பற்றுள்ள

வர்களையும் நாம் பகைக்கவில்லை. ஆனால், நாட்டுப் பற்று ஒரு சிறிதும் இல்லாத காரணத்தால், போக்குவரத்துசாதனங்களைக் குலைத்து, துண்டித்து, பாழ்படுத்துவதோடு, நீதியான சட்ட பூர்வமான சர்க்காரைக் கவிழ்க்கக் கங்கணம் கட்டிக் கொண்டு திரியும் கூட்டத்தினரைத்தான், நாம் எதிர்க்கிறோம். சாதாரண சட்டங்களைக் கொண்டு இவர்களைத் தண்டிக்க இயலாது என்பது கண்கூடு. ஏனெனில், சட்டத்துக்குட்பட்டு நடக்க வேண்டியது குடிமக்களின் அடிப்படையான கடமையாகும். சாதாரணமாக, சட்டத்தை மீறி குற்றங்கள் புரிந்தால், கிரிமினல் வழக்குத் தொடரலாம். ஆனால், சட்டத்தின் அஸ்திவாரத்தையே தாக்கி நாட்டில் பெருங் குழப்பத்தை உண்டாக்கும் போது—அதாவது, “மனிதர்கள் மனிதப் பண்புக் கேற்றபடி நடக்காமலும், சட்டங்கள் சட்டங்களாகக் கருதப்பட்டு இயங்காமல் போகும் நிலைமையில்” அவசரச் சட்டங்களையும், அசாதாரணச் சட்டங்களை

யும் பிரயோகிக்க வேண்டியது அவசியம் என்ற முடிவுக்கு நாங்கள் வந்தோம்.

—பார்லிமென்டில் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து தொகுத்தது.

கொலைகளையும் கொள்ளைகளையும் நடத்தி, இந் நாட்டிலே ஒரு புரட்சியை உண்டாக்கி விடலாமென, இளைஞர்கள் சிலர் நினைக்கிறார்கள். அது தவறான எண்ணமாகும். நல்ல வேளையாக, இந் நாட்டில் மத்திய சர்க்காரை மிக வலுவானதாக அமைத்திருக்கிறோம். ஆதலால், இம்மாதிரிச் செயல்களால் அதை எளிதாக அசைப்பதற்கில்லை. இந்திய தேசம், சீனா தேசம் ஆகிய இரண்டு தேசத்துக்கும் உள்ள வித்தியாசத்தை மறந்து விடலாகாது. நமது நிர்வாகம் பலம்மிகுந்தது. ஆனால், அந்த பலம், நமது மக்களை அடக்குவதற்காகப் பயன்படக் கூடாது. நிர்ப்பந்திக்கப்பட்டாலின்றி, அந்த பலத்தை நாங்கள் வீணாகப் பிரயோகிக்க மாட்டோம்.

இந்தியா ஒரே தேசம். சரித்திரத்தில் என்றும் இல்லாத முறையில் இன்று அதை ஐக்கியப்படுத்தி இருக்கிறோம். இந்த அடிப்படையான ஐக்கியத்தைப் பாதுகாத்து உலக மக்கள் போற்றும் மாபெரும் சின்னமாக அதை நிர்மாணிக்க வேண்டுமென்பது நமது குறிக்கோளாகும். எனவே, அதன் எல்லாப் பிரதேசங்களிலும், அதாவது கேரளமோ, காஷ்மீரமோ, கத்தியவாரோ, கட்சோ, மணிப்பூரோ, அஸ்ஸாமோ, வேறு எப்பகுதியானாலும் சரி, சிறந்த ஆட்சியை நிலைநாட்டுவது நம் பொறுப்பு. அத்தகைய ஐக்கிய இந்தியாவிலே, வளம் செழித்து, மக்கள் எல்லோரும் இன்புற வாழ வேண்டுமென்பதுதான், நம் பேரவா.

ஆதலால், நான் இளைஞர்களை எச்சரிக்கிறேன். இந் நாட்டுக்குப் பொருந்தாத எவ்விதமான அந்நிய கோட்பாடுகளுக்கும் இங்கு இடமில்லை. ஐக்கிய இந்தியா அவற்றை ற

எதிர்ப்பதில் தனது உறுதியைச் சிறிதும் தளரவிடாது.

*   *   *

"மதக் கொடுமைகளுக்குள்ளாகிய மக்கள், அந்நிய நாடுகளிலிருந்து இந் நாட்டிற்குள் வந்து குடியேறினர். கடைசியில், இந் நாட்டையே அவர்கள் தங்களது தாய் நாடாகக் கொண்டனர். எனவே, இந் நாடு, பொறுமைக்குப் புகலிடம்; அன்பின் உறைவிடம்: இவையே தம் ஆயுள் பூராவும் காந்திஜி போதித்த உயர்ந்த கொள்கைகள். இத்தகைய நாட்டில், பலாத்காரத்தை அடிப்படையாகக் கொண்ட பரதேசக் கொள்கைக்கு இடங்கொடுக்கலாமா ?

—1950, மே மாதத்தில் எர்ணுகுளத்தில் பேசியது.

சென்னை
முதன் மந்திரி
கனம் ஸ்ரீ பி. எஸ்.
குமாரஸ்வாமி ராஜா

"கடந்த சுமார் இரண்டு வருட காலமாக, சமூக விரோதிகளான சதிகாரக்கூட்டத்தார், சர்க்காரைப் பகிரங்கமாக எதிர்ப்பதையே தம் கொள்கையாகக் கடைப்பிடித்து வருகின்றனர். இவர்கள் பலாத்காரக் கொள்கையில் தீவிர நம்பிக்கை கொண்டவர்கள். இவர்களது பலாத்கார தீவிரம், வெறியாக மாறி விட்டதென்றே நான் சொல்லுவேன். மகாத்மா காந்தி உபதேசித்ததெல்லாம், இவர்கள் சம்பந்தப்பட்ட வரையில், ஒருவித

பயனையும் அளிக்காது போயிற்று. நம் தேச பிதாவான காந்தியடிகள் பலாத்காரத்துக்கு எதிர்மாறாக அகிம்சைக் கொள்கையை போதித்தார். பிறர்மனம் நோகுமே என்ற காரணத்தால், தப்பித்தவறி ஒரு கடுஞ் சொல்லைக் கூடக் கூறக்கூடாது என்று அவர் வற்புறுத்தினர். ஆனல் இவர்களோ, கொலையையும் இதர பாதகச் செயல்களையும் சர்வ சாதாரணமாகக் கருதுகிருர்கள். கொடூர நெஞ்சம் படைத்த இப் புல்லுருவிகளிடம், அடிப்படையான மனிதப் பண்போ, உணர்ச்சியோ ஒரு சிறிதும் இருப்பதாகத் தெரியவில்லை. தண்டவாளத்தைப் பெயர்ப்பது, சர்வ சாதாரண வேலையாக இவர்களுக்குத் தோன்றுகிறது. இத்தகைய நாசவேலையால் விபரீதங்கள் நிகழ்கின்றன என்பதில் இவர்கள் கவலையே கொள்வதில்லை. இவர்களது நாசச் செயல்களின் காரணமாக ஏற்படும் கொடூர விபத்துகளில், மக்கள் அல்லலுற்று மடியும் காட்சியை இவர்கள் பார்க்கிருர்களா? அல்லது, அவ்விபத்துகளினல் காய

முற்ற மக்களுக்கு, ஒத்தாசை செய்ய முன் வருகிறார்களா? இவ் விபத்துகளினால் சிதறுண்ட சீர்குலைந்த குடும்பங்களைப் பற்றி சிறிதாவது கவலைப்படுகிறார்களா? இவற்றைக் குறித்து அவர்கள் மனம் எண்ணுவதே யில்லை.

*   *   *

" ஆகவே, இச் சதிகாரர்கள் பின்பற்றும் கொள்கை, சமூக நலத்திற்கு விரோதமானது; அதோடு, நாட்டின் க்ஷேமத்திற்கும் பாதக மானது. ரயில் தண்டவாளம், தந்தி மார்க் கம் போன்ற நாட்டுச் செல்வங்களைப் பாழாக் குவதே, இவர்களது நோக்கம். மக்களின் தேவைகள், நாட்டின் நலனுக்கு இன்றி யமையாத சாதனங்கள் ஆகியவற்றைப் பற்றி அவர்கள் கவலை செலுத்துவதில்லை. அவர்களது வெறிக் குணம் அவர்களை அழிவு பாதையிலேயே பிடர் பிடித்து உந்தித் தள்ளு கிறது. சுகாதாரம், கல்வி போன்று, மக் களுக்கு அத்தியாவசியமான பொது நலத் தொண்டுகள் பாதிக்கப்படுவதனாலும், இவர்

கள் கவலைப்படுவது கிடையாது. நாட்டிற்கு இன்றியமையாததாகவுள்ள தொழிற்சாலைகளில் உற்பத்தி தடைப்பட்டாலும், அதைப் பற்றியும் இவர்கள் கவலை கொள்வதில்லை. அவர்களது நாசச் செயல்களின் விளைவாக, தொழிற்சாலைகளிலுள்ள விலை மதிப்புள்ள இயந்திரங்கள் பாழானல், அதைப் பற்றிக் கூட இவர்கள் கலங்குவதில்லை. எல்லாவித போக்குவரத்துக்களையும் ஸ்தம்பிக்கச் செய்து, பஞ்சத்தை உண்டாக்கி, அதன் மூலம் நாட்டிலே குழப்பங்களைத் தூண்டி, ஆட்சி நிர்வாகத்தைச் சீர் குலைத்து, பொது மக்கள் புரட்சி செய்வதற்கேற்ற சூழ்நிலையை உண்டாக்கத் துணை செய்ய வேண்டும் என்பதே, இவர்களது நோக்கம்.

"மக்களைப் பாதுகாப்பதே, சர்க்காரின் முக்கிய கடமையாகும். அத்துடன் இச் சமூக விரோதிகள் ஒரு சிலரின் அடாபிடிச் செயல்களால் பொது மக்களின் சமூக வாழ்வு சீரழிந்து நிலைகுலையாமல் தவிர்ப்பதும் சர்க்காரது பொறுப்பாகும். நமது மதிப்பிற்

குரிய இந்தியப் பிரதம மந்திரி இவர்களின் பலாத்கார நாசச் செயல்களைக் குறிப்பிடும் போது 'இவர்கள் கையாளும் முறைகளை, எந்த சர்க்காரும், ஏன், — எந்த சட்டமும் கூட, பொறுத்துக் கொண்டிருக்காது' என ஓரிடத்தில் கூறியிருக்கிறார். அதோடு நான் மற்றொன்றையும் சேர்த்துச்சொல்ல விரும்பு கிறேன். அதாவது, நாம் இவர்கள் மீது கடுமையாக நடவடிக்கைகளை எடுக்காமல் இருந்திருந்தால், நாம் கஷ்டப்பட்டு அடைந்த சுதந்திரத்திற்குக் கூட ஆபத்து ஏற்பட்டிருக்குமென்று கூறுவேன்.

"இத்தகைய தீய சக்திகளை முளையிலேயே கிள்ளியெறிவது நலம். எனவே, இம்மாதிரியான நாச வேலைகள் எங்கெங்கு தலையெடுக்கின்றனவோ அங்கெல்லாம், அவற்றை உடனே அடக்கத் தங்களால் முடிந்த நடவடிக்கைகளை எடுக்க, சர்க்கார் சிறிதும் தயங்கமாட்டார்களென்பதில் சந்தேகமேயில்லை. ஆயினும் இந்தச் சமூக விரோதிகள் விஷயத்தில், பொது மக்களது எதிர்ப்பும்

பெருகி வலிவுறவேண்டும். இதற்குப் பொது ஜனங்களின் ஒத்துழைப்பு தேவை. இப் புல்லுருவிகளின் கொடூரச் சதிச் செயல்களைப் பற்றி பொது மக்கள் நன்கு தெரிந்து கொள்வார்களானல், இப் பிரச்னையை அவர்களே தீர்த்து விடலாம். நான் இவ்விதம் சொல்லுவதால், பொது மக்கள் இப் பிரச்னையின் முக்கியத்துவத்தை அறியவில்லை யென்றோ அல்லது அவர்கள் சர்க்காருடன் ஒத்துழைப்பதற்குத் தயங்குகிறார்களென்றோ குறை கூறுவதாக எண்ண வேண்டாம். இப் புல்லுருவிகள், குருதி தோய்ந்த பாதையிலே, கொடூரச் செயல்கள் பல புரிந்து செல்வதைப் பொது மக்கள் அறவே வெறுக்கின்றனர். அவ்விதம் வெறுப்பதை, அவர்கள் வெளிப்படையாகப் பல சந்தர்ப்பங்களில் காட்டி வருகின்றனர்.

"இச் சமூக விரோதிகள், சாகச முறைகளை அடிக்கடிக் கையாளுவதும் உண்டு. அம் முறைகளின் மூலம் நாட்டிலே அவர்கள் பிளவுண்டாக்குவதைத் தடுக்க, எங்கும்

எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தங்களது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நாட்டு நிலைமையை எந்த விதத்திலாவது பயன்படுத்திக் கொள்ளும் கருத்துடையவர்கள் இவர்கள் என்பதை இங்கு முக்கியமாக எடுத்துக்கூறவேண்டி யிருக்கிறது. மாணவர்களைக் கூட, இவர்கள் சும்மா விட்டு வைக்கமாட்டார்கள். தங்களது விபரீத யோசனைகளை மாணவர்களுக்கும் புகட்டி, அவர்களை கருவிகளாக உபயோகித்துக் கொள்ளச் சிறிதும் பின்வாங்குவதில்லை. முக்கியமாக, இவர்கள் சண்டப்பிரசண்டம் செய்து காட்டுவதெல்லாம், ஆலைத் தொழிலாளர்களிடையேயும், பண்ணை விவசாயிகளிடையேயுமே என்பதை நீங்கள் அறிவீர்கள்.

* * * *

இறுதியாக, பொது மக்களுக்கு ஒரு எச்சரிக்கையும், அதே சமயத்தில் ஒரு வேண்டுகோளும் விடுக்க நான் விரும்புகிறேன். முதன் மந்திரி என்ற ஹோதாவில் நான் உங்களுக்கு

உறுதியாகக் கூற விரும்புவது இதுதான். இச் சமூக விரோதிகள் அங்கங்கே தூண்டிவிடும் கிளர்ச்சிகளனைத்தையும், சர்க்கார் தங்களது முழு பலத்தையும் உபயோகித்து அடக்குவார்களென்பது நிச்சயம். ஜனநாயக தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட நமது சர்க்கார், எக்கொள்கையையும் பரப்புவதற்கான அனுமதியை யார் விரும்பினாலும் அவர்களுக்கு அளிக்க எப்பொழுதும் தயாராக இருக்கின்றனர்; ஆனால் சட்டத்துக்குட்பட்டு, அமைதிக்கும் பங்கம் விளைவிக்காது, அவர்கள் தங்களது கொள்கைகளைப் பரப்புதல் வேண்டும். பேச்சுரிமை போன்ற மக்களது பிரஜா உரிமைகளைப் பெறுவதற்காக பல்லாண்டுக் கணக்கில் நாம்—அதாவது, நீங்களும் நானும்—மகாத்மா காந்தி அவர்களின் தலைமையின் கீழ், தொடர்ந்து போராடி யிருக்கிறோம். ஆனால், பொது மக்களையே எதிர்த்துத் தாக்குவதற்கென பலாத்காரத்தைக் கையாள்வதற்கும், இன்னும் பல கொடூரச்

செயல்களைப் புரிவதற்கும் அனுமதியளிப்பது பிரஜா உரிமையாகாது. சுதந்திர இந்தியாவின் குடிமக்களிலே நானுமொருவன் என்ற ஹோதாவிலே, உங்களை நான் வேண்டுவது இதுதான்: நாம் பாடுபட்டுப் பெற்ற சுதந்திரத்தையும், நாம் போற்றி வளர்த்துவரும் சிறந்த கொள்கைகள், கருத்துக்கள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றையும் பாதுகாத்துப் பராமரிக்க வேண்டும். இந்தப் பொறுப்பு சர்க்காரை மட்டுமன்றி, பொது மக்களையும் சார்ந்ததாகும். எனவே, இவற்றை, இச்சமூக விரோதிகளான பலாத்காரக் கூட்டத்தார் தாக்காமல் பாதுகாப்பது, பொது மக்களாகிய உங்களுடைய கடமையாகும்.

—ஆல் இந்தியா ரேடியோ மூலம் சென்னை ராஜ்ய முதன் மந்திரி செய்த சொற்பொழிவிலிருந்து எடுக்கப்பட்டது.

★

கனம்
ஸ்ரீ பக்தவத்சலம்

ஜனநாயக வளர்ச்சிக்குப் பெரிய முட்டுக் கட்டையாக இருக்கும் ஒரு சில நாசகாரச் கூட்டத்தாரை ஒடுக்க வேண்டியது நம்முடைய இன்றியமையாத கடமையாகும்.

* * * *

கொலை, கொள்ளை முதலிய பலாத்காரச் செயல்களைக் கையாள்வோர் அந்தக் காட்டு மிராண்டி வாழ்வுக்கு நம்மை இழுத்துச் செல்லப் பார்க்கிறார்கள். அதற்காக, அரசியல்

கொள்கைகள், பொருளாதாரத் திட்டங்கள், சர்வ தேசியம் முதலிய போலி கோஷங்களை யெல்லாம் கிளப்பி, மக்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள். ஆனால். பொதுமக்களும், அரசாங்கமும் இவற்றுக்கெல்லாம் சளைத்துப் போகாது.

* * * *

சமூகத்தில் குற்றம் விளைவித்து, மக்களுக்கு அநாவசியமான துன்பங்களை உண்டாக்குவோரை அரசாங்கம் நியாயப்படி தண்டிக்க கடமைப்பட்டிருக்கிறது

* * * *

"தீமையை எதிர்த்துப் போராடி வெற்றி காண வேண்டும்" என்பது மகாத்மா காந்தியடிகள் வற்புறுத்திய கடமை. எனவே, சமூகத்துக்கும் நாட்டுழவனுக்கும் விரோதமான தீய காரியங்கள் செய்வோரை அடக்குவது அரசாங்கத்தின் கடமை மட்டுமல்லாமல், தனியொரு பிரஜையின் இன்றியமையாத கடமையும் ஆகும்.

—கனம் பக்தவத்சலம், ஆ. இ. ரே. நிலையத்தில் இருந்து ஆற்றிய சொற்பொழிவு.

கனம்
ஸ்ரீ கோபால் ரெட்டி

'நமது ராஜ்யத்தில் கடந்த இரண்டு வருட காலமாக, கவலையையுண்டாக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. சிற்சில இடங்களில் பொதுநல விரோதிகள் அடிக்கடி குழப்பத்தையுண்டுபண்ணி வருகிறார்கள். சர்க்காரை எதிர்ப்பதிலும், பாமர மக்களைத் துன்புறுத்துவதிலுமே அவர்கள் கண்ணுங் கருத்துமா யிருக்கிறார்கள்'......' இவர்கள் விஷயத்தில், சர்க்கார் அதிக பொறுமை காட்டி வந்திருக்கின்றனர்......'நாட்டில் அமைதியைநிலைநிறுத்தவும் இந்த நாசகாரக் கும்பல்கள் மக்களது உயிர், உடைமை ஆகியவைகளுக்கு உலைவைப்பதைத் தடுக்கவும், சர்க்கார் எல்லாவித முயற்சிகளையும் செய்து வருகின்றனர்.

— ஆ. இ. ரே. யில் கனம் ஸ்ரீ பி. கோபால் ரெட்டி பேசியதிலிருந்து தொகுக்கப்பட்டது.

கனம்
ஸ்ரீ மாதவமேனன்

'இச்சமூக விரோதக் கூட்டத்தார் ஏழை பங்காளர்களென்ற வேடமிட்டுக் கொண்டு தொழிலாளர்களையும், விவசாயிகளையும் மயக்கி பயமுறுத்தல், பயங்கர வேலைகளைப் புரிதல், கொலை செய்தல், கொள்ளையடித்தல், கொள்ளி வைத்தல் போன்ற கீழ்த்தரமான அழிவுச் செயல்களைப் புரியத் தூண்டுவதன் வாயிலாகத் தங்கள் வேலைகளுக்கு அவர்களைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். நாட்

டின் அமைதியைக் குலைத்து அரசியல் பதவியைக் கைப்பற்றுவதற்கு, அவர்கள் இவ்விதமான இழி செயல்களைப் புரிகின்றனர். இவற்றின் மூலம் அவர்கள் சமூகத்திற்கே விரோதிகளென்பதை நிரூபித்து வருகிறார்கள். சூதுவாதறியாத பாமர மக்களையும் இவர்கள் பசப்பி மயக்கும் முறையே ஒரு நூதன மாய் மாலமாயிருக்கிறது. இக்கூட்டத்தினர் எல்லாவற்றையும் காற்றிலே பறக்கவிட்டுப் பின்னர் கொள்ளையடித்து வாழும் தொழிலிலே இறங்குகிறார்கள். இவர்களின் இத்தகைய செய்கையை எந்த சர்க்காராவது பொறுமையுடன் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா?

—ஆ. இ. ரே. யில் கனம் மாதவமேனன் பேசியதிலிருந்து தொகுத்தது

★

1950, ஜூலையில், சென்னையிலே கூடிய சோஷியலிஸ்ட் கட்சியினரின் வருடாந்திர மகாநாட்டில் சோஷியலிஸ்ட் தலைவர் ஸ்ரீ ஜெயபிரகாஷ் நாராயண்

'புரட்சிகரமான முறைகளைப் பின்பற்றி, அதன் விளைவாக ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கலாம் என்று அவர்கள் நம்புகிறார்கள். ஆனால், உண்மையில் அவர்கள் பயங்கரமான பலாத்காரத்தைக் கையாண்டு வருகிறார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பலாத்காரக் கொள்கையினால் எத்தகைய விளைவுகள் உண்டாயின வென்பதை கடந்த இரண்டு வருட காலத்தில் நடந்த சம்பவங்கள் நன்கு எடுத்துக் காட்டும். இவ்விளைவுகளால், கம்யூனிஸத்

துக்கே, இந் நாட்டில் இப்பொழுது கெட்ட பெயர் ஏற்பட்டுள்ளது. அத்துடன், இக் கட்சியின் கட்டுக்கோப்பும் ஒற்றுமையுணர்ச்சியும் வெறுங் கட்டுக்கதையே என்பது அம்பலமாகி இருக்கிறது. அக்கட்சியினரிடையே அதிக பிளவு ஏற்பட்டிருப்பதோடு, அவர்களது கோட்பாடுகளும் ஒரே குளறுபடிமயமாக உள்ளன. சமீப காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியில் ஏற்பட்டுள்ள மாறுதலைக் குறிப்பிட்டு, அவர் கூறியதாவது :— ரஷியாவில் பொது மக்கள் ஆயுதந் தாங்கிக் கிளர்ச்சி செய்தனர். அதன் விளைவாக அந்நாட்டில் இருந்துவந்த ஆட்சிமுறை தகர்த்தெறியப்பட்டு, புரட்சி சர்க்கார் ஒன்று புதிதாக அங்கு தோன்றியது. ரஷியாவில் ஏற்பட்ட புரட்சியைப்போல் இந்நாட்டில் புரட்சியை உண்டாக்க முயன்றால், தோல்வி ஏற்படுவது நிச்சயம். சொல்லப்போனால், இந்நாட்டில் ஏற்கெனவே அந்த முயற்சி தோற்றுவிட்டது. ஏனெனில், ஆயுதந்தாங்கிய கிளர்ச்சியை நினைத்தமாத்திரத்தில் உண்டாக்கிவிட முடி

யாது. இத்தகைய புரட்சிக்கான நடைமுறைத் திட்டத்தை மாற்றுகையில், ரஷிய உதாரணத்துக்குப் பதில் சீன மோஸ்தரைப் பின்பற்றலாம் என்று தோன்றுகிறது. இந்தப் புதிய கொள்கையின் காரணமாக கம்யூனிஸ்டுகள் பயங்கர பலாத்கார முறைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கலாம். நகர வட்டாரங்களிலே கௌரவமான ஒருகொள்கையைப் பின்பற்றுவதன் மூலம், மத்திய வகுப்பைச் சார்ந்த மக்களை வசப்படுத்த இவர்கள் முயலலாம். ஆனால், அதே சமயத்தில், குறிப்பிட்ட கிராம வட்டாரங்கள் சிலவற்றில் தம் கவனம் முழுவதும் செலுத்தி, அங்கே பலாத்கார நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தலாம். இந் நாட்டின் சில பிரதேசங்களில் கம்யூனிஸ்ட் ஆதிக்கம் ஏற்படுத்த வேண்டும் என்பது இவர்கள் உத்தேசம். அதாவது தாம் பூரண அதிகாரம் செலுத்தக்கூடிய சில பிரதேசங்களை இந்தியாவில் சிருஷ்டிக்க கம்யூனிஸ்டுகள் விரும்புகின்றனர்.

* * * *

"அவர்களுடைய இந்தத்திட்டமும்தோல்வி யடையும் என்பதில் சந்தேகமில்லை. எனெ னில், குடியரசாக மலர்ந்துள்ள இன்றைய இந்தியாவுக்கும், ஜார் சக்கரவர்த்தி ஆண்ட அந்தக் காலத்து ரஷியாவுக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வேறுபாடிருக்கிறது. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக உள் நாட்டு யுத்தத்தால் சிதறுண்ட சீன தேசத் துக்கும் இந் நாட்டுக்குங்கூட அதே வேறு பாடுதானிருக்கிறது. இங்கு, ஹிமாலயம் முதல் குமரிமுனை வரை உள்ள நாடு முழுவ தும் ஒரே மத்திய சர்க்காரின் நிர்வாகத்தின் கீழ் இருக்கிறது. தேசத்தின் பாதுகாப்புக் காக திறமை வாய்ந்த ஒரே மத்திய ராணுவம் உள்ளது. அதோடன்றி, இங்கே தனிப்பட் டவர்கள் ராணுவம் வைத்துக்கொள்ளும் பிர புத்துவ முறையும் இல்லை. தவிர நம்முடைய அரசியல் நிர்ணயசபை கூடி, நமக்கென ஓரள வுக்கு ஜனநாயக அரசியல் திட்டத்தை வகுத் துக் கொடுத்திருக்கிறது. இந் நாட்டிலே வயது வந்தோர்களுக்கெல்லாம் வாக்குரிமை அளிக்

கப்பட்டுள்ளது. பலாத்காரக் கொள்கையை வெளிப்படையாக மேற்கொள்ளாத எதிர்க் கட்சிகளெல்லாம் தாராளமாக இந் நாட்டிலே தொழில் பட அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. பொதுத் தேர்தல்களும் அடுத்த ஆண்டிலே நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருக்கிறது.''

"இத்தகைய நிலையிலே, இந் நாட்டில் கம்யூனிஸ்டுகளின் பூரண அதிகாரத்துக்குட்பட்ட ஒரு பிரதேசம் ஏற்படுவதோ அல்லது அது படிப்படியே வளர்ந்து இந்தியா முழுவதிலும் இவர்கள் கற்பனைப்படி எழுந்து பரவுவதோ முடியாத காரியம்.

"சுமார் இரண்டரை வருடங்களுக்கு முன் இந்திய கம்யூனிஸ்டுகள் கல்கத்தாவில் கூடிய போது, ரஷியாவின் கட்டளைப்படி நடக்கத் திட்டமிட்டனர். ஆனல், அதன்படி நிறைவேற்றப்பட்ட திட்டங்களனைத்தும் தோல்வியுற்றன. சமீபத்தில் மற்ருெரு கட்டளை இவர்களுக்கு ரஷியாவிடமிருந்து வந்திருக்கிறது.

"சீனுவின் தலைவரான மோ-ஸே-துங் உதாரணத்தைப் பின்பற்றுக" என்பதுதான் அக் கட்டளை. இதன்படி நடக்க இப்பொழுது கம்யூனிஸ்டுகள் திட்டமிட்டிருக்கிறார்கள் ஆயினும், முன்பு போலவே இதுவும் தோல்வியுறுமென்பதில் சந்தேகமில்லை.

"நாட்டிலே ஜன நாயகத்தை அடிப்படையாகக் கொண்ட சக்திகள் திறமையோடு சரிவர இயங்குமானல், எதேச்சாதிகார பாஸிஸ சக்தியைத் தடுக்க முடியும். அத்துடன் ஜன நாயகம் நிலைபெற்று, மேன்மேலும் வளர்ந்தோங்குவது சாத்தியமாகும்."

* * * *

சோஷியலிஸ்ட் கட்சியின் பொதுக் காரியதரிசியான ஸ்ரீ ஜெயபிரகாஷ் நாராயண், சென்னையிலே கூடிய சோஷியலிஸ்ட் கட்சிப் பிரதிநிதிகள் மகாநாட்டில் பேசும் போது, இந் நாட்டில் கம்யூனிஸ்டுகள் பின் பற்றும் சதிகாரச் சூழ்ச்சி முறைகளை வன்மையாகக் கண்டித்தார். இது விஷயமாக இந்திய கம்யூ

னிஸ்ட் கட்சி பின்பற்றும் கொள்கையைக் கண்டித்து அவர் கூறியதாவது :—

“ கம்யூனிஸ்ட் கட்சி ஒரு வித மறைமுகத் தோற்றத்துடன் இந்திய மக்களிடையே மறு படியும் கலந்து உலாவ முன் வந்திருக்கிறார் கள். தொழிலாளர் கட்சி யென்றோ அல்லது கிஸான் கட்சியென்றோ அக் கட்சி இனிமேல் அழைக்கப்படக் கூடும். எந்தவிதமான பெய ரைச் சூட்டிக் கொண்டாலும், ஒன்றுமட்டும் நிச்சயம். இதுவரை தாம் பின்பற்றிவந்த கொள்கைகளினால் தமக்கு பலத்த நஷ்டமேற் பட்டிருக்கிறது என்பதை அவர்கள் நன்கு உணர்ந்துவிட்டனர். தவிர, பொது மக்கள் தொடர்பும் அடியோடு நீங்கிவிட்டது. எனவே, அவர்களின் நடைமுறைத் திட்டத் தில் மாறுதல் ஏற்படப்போகிறது. அவர்கள் தங்களது கொள்கையை மாற்றியமைத்து, மக்கள் முன் புது வேடத்தில் மீண்டும் தோன் றுவார்கள். நாட்டில்உள்ள மத்தியதர வகுப் பினரைச் சார்ந்த மேல் வர்க்கத்தார், கீழ் வர்க்கத்தார், ஆகிய இரு சாராரையும் தங்

கள் பக்கம் சேர்த்துக்கொள்ள அவர்கள் பல விதங்களிலும் முயல்வார்கள்.

கம்யூனிஸ்டுகளின் அகராதியில் ஜன நாயகம் என்பதற்கு மக்கள் மனவழி நடைபெறும் ஜன நாயக சோஷியலிசச் சமுதாயத்தை நிலை நிறுத்துவது அல்லது புதிதாக உண்டாக்க நினைப்பது என்ற அர்த்தமில்லை. அதற்கு பதிலாக, கம்யூனிஸ்ட் கட்சியின் உத்தேசங்களை எப்படியாவது நிறைவேற்ற முயல வேண்டும் என்பதே ஜன நாயகத்துக்கு கம்யூனிஸ்டுகள் கூறும் வியாக்கியானமாகும். இந்தியாது இன்றைய நிலை என்ன? இந்திய மக்கள் வருங்காலத்தில் எவ்வாறிருப்பார்கள்? இந்தியாவின் எதிர்கால நிலை எப்படியிருக்கும்? என்பதைப் பற்றியெல்லாம் அவர்கள் ஒரு சிறிதும் கவலை கொள்ளவே மாட்டார்கள்."

★

இந்தியாவில் கம்யூனிஸ்டு கட்சியின் தந்திரங்கள்

"கேட்டோ" எழுதியது

ருமேனியாவிலுள்ள புகாரெஸ்டிலிருந்து கம்யூனிஸ்ட் செய்தி காரியாலயம் (காமின்பாரம்) வெளியிடும் பத்திரிகையில் நிரந்தர சமாதானத்திற்காகவும், மக்களது ஜனநாயக ஆட்சிக்காகவும் என்ற பிரமாதமான தலைப்புடன் 1950-ம் வருடம் ஜனவரி, 27ந் தேதியன்று ஒரு கட்டுரை வெளியாகியது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை அதன் மண்டையிலடிப்பதுபோல், ஒழுங்கு முறையைப் பின்பற்றவில்லை என்ற தோரணையில் இக் கட்டுரை எழுதப்பட்டிருந்தது. பிறகு இதைத் தொடர்ந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பின்பற்றும் முறைகளினால் ஏதோ அவர்கள் கொள்கையில் மாறுதல் ஏன் மனமாற்றமும்கூட ஏற்பட்டுவிட்டது போன்ற ஒரு பிரமையை அவர்கள் உண்டு பண்ணி விட்டார்கள். மிகவும் சிக்கலான இப் பிரச்னையை நன்கு சீர்தூக்கி ஆராய்வதற்கு, கம்யூனிஸ்டுகளது நடவடிக்கைகளின் அந்தரங்க விவரங்களை முதலில்

தெரிந்து கொள்வது மிகவும் அவசியமாகும். கொள்கையில் மாற்றமா? புதுத் தோற்றமா? இதெல்லாம் எவ்விதம் முடியும்? இவை பற்றி இந்திய மக்களனைவரும் நன்கு அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

'மக்கள் யுத்தம்' என்ற கோஷத்தின் அந்தரங்கம்.

1939—ம் வருஷத்தில் ஸ்டாலினுக்கும் ஹிட்லருக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டதல்லவா? அதை ஆதாரமாக வைத்துக்கொண்டு, நாஜி ஜெர்மனி மீது பிரிட்டன், பிரான்ஸ் மற்ற நேச நாடுகள் ஆகியவை ஒன்றுகூடித் தொகுத்த யுத்தத்தை ஏகாதிபத்ய யுத்தம் என இந்திய கம்யூனிஸ்டுகள் கண்டித்துக் குறை கூறினார்கள். இது அவ்வருஷம் செப்டம்டரில் நடந்ததென்பது எல்லோருக்கும் ஞாபகமிருக்கலாம். ஏகாதிபத்திய யுத்தம் என்ற பிரசாரத்தை 1941, ஜுன் 22ந் தேதி வரை இந்தியக் கம்யூனிஸ்டுகள் தொடர்ந்து நடத்தி, அதற்கேற்ப தங்கள் திட்டங்களை வகுத்து வந்தனர். அதன் பின்பு, ஸ்டாலின்—ஹிட்லர் உறவு முறிந்தது. ஹிட்லர் ஸ்டாலின்மீது பாய்ந்து விட்டார்; ரஷ்யாமீது ஜெர்மன் படையெடுப்பு ஆரம்பமாயிற்று. அச் சமயத்தில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியினரோ தியோலி பாதுகாப்பு முகாமில் காவற்கைதிகளாக இருந்தனர்.

பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சிக் காரியதரிசி ஹாரி பாலிட் இவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினர். அப் பொழுது இந்திய சர்க்காரது உள்நாட்டு இலாகா வின் காரியதரிசியாயிருந்த சர் ரெஜினல்ட் மாக்ஸ் வெல் என்பவருடைய தயவால், அக்கடிதம் இவர் களுக்குக் கிடைத்தது. 'ஏகாதிபத்ய யுத்தம் ஒழிக' என்ற கோஷத்தை இவர்கள் இனிமேல் கிளப்பக் கூடாதென்றும், அதற்குப் பதிலாக 'இது மக்கள் யுத்தம்' என்ற கோஷத்தைக் கிளப்ப வேண்டு மென்றும் அவ்விதம் செய்யாவிட்டால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அக் கடிதத்தில் எழுதியிருந்தார். பி.ஸி. ஜோஷி முதலிய கம்யூனிஸ்ட் தலைவர்கள், இக் கடிதத்தைக் கண்டு மிரண்டு போனர்கள். தங்கள் சகாக்களுடன் நீண்ட விவாதங்கள் செய்து, கடைசியாக அவர் களும் இத்தகைய குட்டிக் கரணக் கொள்கையை ஒப்புக் கொள்ளும்படி செய்தனர். பிறகு அவர் கள், யுத்த காலத்தில் பிரிட்டிஷாருடன் சேர்ந்து கழைக் கூத்தாடிய விநோதமும், மகாத்மா காந்தி மீதும் அவர் ஆரம்பித்த "இந்தியாவைவிட்டு வெளி யேறு" இயக்கத்தின் மீதும் சொரிந்த வசை மாரி யும் மிகச் சமீப காலத்தில் நடந்தவையாதலால், மக்கள் அவற்றை மறந்திருக்கமாட்டார்கள்.

கல்கத்தா மகாநாடு

அடுத்தபடியாக 1948-ம் வருஷம் ஆரம்பத்தில் நடைபெற்ற காரியங்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் போக்கை நன்கு எடுத்துக் காட்டும். அதாவது உலக மாணக்கர்களது ஐக்கிய கழகமும், உலக ஜன நாயக இளைஞர்கள் சமஷ்டிக் கழகமும், கம்யூ னிஸ்ட் ஸ்தாபனத்தின் முன்னணிக் கழகங்களே யாகும். இவை உலக தொழிற் சங்க சமஷ்டியுடன் இணைக்கப் பெற்றவை. இவ்விரண்டு கழகங்களின் சார்பில், கல்கத்தாவில், 1948, பிப்ரவரி மாதம் 19-ம் தேதி முதல் 25-வரை ஒரு மகாநாடு நடை பெற்றது. இம் மகாநாட்டில் உலக நாடுகள் பல வற்றிலிருந்தும் வந்த ஏஜண்டுகள் கலந்து கொண் டனர். இதை 'தென்கிழக்கு ஆசிய இளைஞர் மகா நாடு' எனக் கூறினார்கள்! இம் மகாநாட்டிலேதான் இந்திய கம்யூனிஸ்டுகள் தங்கள் வருங்கால வேலைத் திட்டத்தைப் பற்றி முடிவு செய்தார்கள். ராஜீய உறவை முன்னிட்டு அளிக்கப்பட்ட அனுமதிச் சீட்டுகளைக் காட்டி, இந்தியாவுக்குள் அப்பொழுது நுழைந்த ரஷியர்களும் இம் மகாநாட்டில் கலந்து கொண்டனர். ஆசிய நாடுகளனைத்திலும் குழப்பங் களை உண்டாக்கி உள்நாட்டு யுத்தங்களைத் துவக்க வேண்டுமென, இம் மகாநாட்டில் கட்டளை பிறப்

பிக்கப்பட்டது. இம் மகா நாட்டுக்குப் பிறகு, ஏப்ரல் மாதத்தில் பர்மாவிலே கிளர்ச்சி, மலேயாவிலோ ஜூன் மாதத்தில் கலகம்; 1948, செப்டம்பரில் இந்தோனேசியாவிலே குழப்பம்! அதே வருஷம் பிப்ரவரி, 28உ முதல் மார்ச் 6உ வரை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினரின் இரண்டாவது மகா நாடு, கல்கத்தாவிலேயே நடந்தது. அச்சமயத்தில் தான், இந்தியாவில் இக் கட்டளையை எவ்விதம் நிறைவேற்றுவது என்பதை யோசித்தார்கள். இந்தியக் கட்சிக்கு அம் மகாநாட்டிலே ஒரு புதிய கொள்கை உருவாகியது: பி. டி. ரணதேவ் இக் கட்சியின் பொதுக் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நேரு சர்க்காரை நேர்முகமாகத் தாக்க வேண்டிய பொறுப்பை கட்சி ஏற்றுக்கொண்டது. வேலை நிறுத்தம், நாசவேலை முதலியவற்றின் மூலம் இந்தியாவின் பொருளாதாரத்தைச் சீர்குலைப்பது; கொலை புரிதல் போன்ற கொடிய பலாத்காரச் செயல்களைத் தீவிரமாக நடத்துவது; வெடிகுண்டுகளை வீசுவது; ரயில்களைக் கவிழ்ப்பது.—இவை போன்ற இன்னும் பல அழிவுச் செய்கைகளைப் புரியும் பொறுப்பும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. உடனே இக்காரியங்களை நிறைவேற்றுவதற்கான கட்டளைகள் பிறப்பிக்கப் பட்

டனர்: கட்சியினர் அவற்றின்படி கொடிய அட்டூழியங்களைப் புரிய ஆரம்பித்தனர். "கம்யூனிஸ்டுகளின் அக்கிரமச் செயல்கள்" என்ற பிரசுரத்தை இந்திய சர்க்காரின் உள்நாட்டு இலாகா வெளியிட்டிருக்கிறது. அப்பிரசுரத்தில், மேற்கூறிய கட்டளைகளைப் பற்றித் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இக் "கட்டளைகளின்"படி கொள்ளை அடித்தல், கொள்ளி வைத்தல், கொலை புரிதல், சிறைச்சாலைகளில் கலகம் செய்தல், ரயில்களைக் கவிழ்த்தல் ஆகிய பல கொடூரச் செயல்கள் இந்நாட்டிலே கடந்த இரண்டு வருட காலமாக நடத்தப்பட்டன. இவற்றின் விளைவாக, பொது மக்களும், பேதைப் பெண்களும், பால்மணமாறாத பச்சிளங் குழந்தைகளும் கொல்லப்பட்டனர்.

ரயில்வேயில் நாசவேலை

இந்நாட்டில் கம்யூனிஸ்டுகளின் கொடுமையைக் கட்டுப்படுத்தி, புகழ் வாங்கியவர் சர்தார் படேல். அவர்கூட, 'பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகளோ இதர நாட்டுக் கம்யூனிஸ்டுகளோ எக்காலத்திலும் புரிந்திராத இழிவுமிக்க நாசவேலைகளை, இந்திய கம்யூனிஸ்டுகள் சிறிதும் தயக்கமின்றி செய்ய ஆரம்பித்து விட்டார்களே' என ஆச்சரியமுற்றார். ஆனால்

மற்ற பிரதேசங்களில் கம்யூனிஸ்டுகள் ரயில்வே நாசவேலை நடத்துவதில் புதுமை ஒன்றும் இல்லை. "நியூ லீடர்" என்ற அமெரிக்க சோஷியலிஸ்ட் பத்திரிகை, 1950 பிப்ரவரி 11 உ யன்று மெக்ஸிகோ விலிருந்து அதன் நிருபர் அனுப்பிய செய்தி யொன்றைப் பிரசுரித்திருக்கிறது. அந்நிருபர் அனுப்பிய செய்தியில், கீழ்க்கண்டுள்ள குறிப்பும் காணப்படுகிறது:—"இரண்டாவது உலக யுத்தத்தின் முதற் கட்டத்தில் சில விபரீத நிகழ்ச்சிகள் இந்நாட்டிலே (மெக்ஸிகோவிலே) நடக்க ஆரம்பித்தன. ரயில்களெல்லாம் மணிக் கணக்குப்படி வராது. தாமதப்பட்டே வர ஆரம்பித்தன. இவ்விதம் காலதாமதப்பட்டு ரயில்கள் வருவது நாளடைவில் சகஜமாகிவிட்டது. வேலை நிறுத்தங்கள் தொடர்ந்து நடைபெற்றன. பாசஞ்சர் வண்டிகளும் கூட்ஸ் வண்டிகளும் ரயில் ஸ்டேஷன்களுக்கிடையிலே மணிக் கணக்கில்—ஏன், நாள் கணக்கில் கூட—கவனிப்பாரற்றுக் கிடந்தன. மெக்ஸிகோவில் நிலைமை இவ்வாறிருக்கும் போது, ரஷியா யுத்தத்தில் கலந்துகொள்ள வேண்டியதாகி விட்டது. ரஷியா யுத்தத்தில் ஈடுபட்டதும், மெக்ஸிகோவில் பூரண மாறுதலேற்பட்டது. மெக்ஸிகோ ரயில்களெல்லாம் திடீரென சுறுசுறுப்புக் கொண்டு, கால அட்ட

வண்டிப்படி ஸ்டேஷன்களுக்கு வரத் தலைப்பட்டன. இத்தகைய சிறந்த ரயில் நிர்வாகம், யுத்தம் முடியும் வரை தொடர்ந்து நடந்தது. ஆனால், அமெரிக்க ஜனாதிபதி ட்ருமன் மாஸ்கோவுடன் 1946ல் சௌஜன்யமான உறவு கொண்டாடாமற்போகவே வேதாளம் முருங்கை மரத்தில் ஏறின கதை மாதிரி, மெக்ஸிகோ ரயில்கள், மறுபடியும் காலதாமதப்பட்டு வரத் தலைப்பட்டன. ரயில் விபத்துகளும் மீண்டும் உண்டாயின."

இந்தியாவைப் பற்றிய பிரசாரம்

இந்திய கம்யூனிஸ்டுகள் மட்டும் ஏன் கிளர்ச்சி செய்ய வேண்டும்? அதுவும், சந்தர்ப்பத்தையோ சூழ்நிலையையோ சரிவரக் கவனிக்காது, முன் யோசனையின்றி அவசரத்துடன் அவர்கள் மட்டும் ஏன் கிளர்ச்சி செய்ய வேண்டும்? இவ்விதம் அவர்களைச் செய்யத் தூண்டும் தற்கொலை முயற்சிக்குக் காரணமென்ன? இக்கேள்விகளுக்குரிய விடைகளை, அவ்வப்போது மாஸ்கோ ரேடியோ ஒலிபரப்பும் பிரசாரத் துணுக்குகளிலும், மாஸ்கோ பத்திரிகைகள் வெளியிடும் செய்தித் துணுக்குகளிலும் காணலாம். 1949-ம் வருடம் ஆரம்பமாகும் வரையில், நேரு சர்க்காரை மேற்

கூறிய சோவியத் பிரசார சாதனங்கள் கண்டபடி தாக்கி வந்தன. சீனுவில் மார்ஷல் சியாங்-கே-ஷேக் ஆட்சி மறைந்ததும், உலகிலேயே இந்தியா (கம்யூனிஸ்டுகளுக்கு) மூன்ருவது "பொது விரோதி"யாகி விட்டது! அப்போது ரஷிய பிரசார வேகம் உச்சநிலையை எட்டிவிட்டதென்று கூறலாம். அமெரிக்காவும், பிரிட்டனும் முறையே உலகின்,முதலாவது இரண்டாவது பொது விரோதிகளாம். இந்தியாவுக்கு உண்மையில் சுதந்திரமே கிட்டவில்லையாம். ஆங்கிலோ-அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு நேருவும், படேலும் கையாட்களாம். இந்திய மக்கள் அடிமைப்பட்டு பட்டினியால் வாடி வருந்தி, தங்களது விடுதலைக்காக மாஸ்கோவை எதிர் நோக்குகிருர்களாம். இந்தப் பாணியிலே தான் சோவியத் ஆதிக்கத்துக்குட்பட்ட ரேடியோ நிலையங்களும் பத்திரிகைகளும் இந்தியாவைப் பற்றிப் பிரசாரம் செய்தன.

மாஸ்கோ பத்திரிகையான நியூ டைம்ஸ் 1949, ஜனவரி 12-ம் தேதியன்று பிரசுரித்த கட்டுரையிலே, இந்திய தேசிய காங்கிரஸைப் பற்றி கீழ்க் கண்டுள்ளபடி விளக்கம் காணப்பட்டிருந்தது: "இந்த காங்கிரஸ் ஒரு பிற்போக்கான கட்சி. இந்திய முத

லாளிகள், மிராசுதார்கள், ராஜ குமாரர்கள் ஆகியோர் இக்கட்சியிலிருக்கிறார்கள். இவர்கள், ஆங்கில-அமெரிக்க ஏகாதிபத்திய வெறியர்களோடும், இந்திய பிற்போக்காளர்களோடும், தங்களது நாட்டு மக்களையே எதிர்த்துப் போராடுவதற்காக, உறவு கொண்டாடுபவர்கள்."

ஜெயப்பிரகாஷ் நாராயண் நடத்தும் சோஷலிஸ்ட் கட்சியைப் பற்றி,..."இக் கட்சி பிற்போக்கின் திலகமாகத் திகழ்கிறது" என்று 1948, நவம்பரில் பிரசுரிக்கப்பட்ட 'Trud' என்னும் மாஸ்கோ பத்திரிகை வர்ணித்திருக்கிறது.

1949, ஜனவரி 30உயன்று, 'ப்ராவ்டா' பத்திரிகை, பண்டித நேரு இந்தோனேசியா சம்பந்தமாக நடத்திய டெல்லி மகாநாட்டைத் தாக்கி எழுதியது.

வகுப்புத் துவேஷத்தை யுண்டாக்கவும் முயற்சிகள் செய்யப்பட்டன. 1949, மார்ச் 4உயன்று, "போல்ஷவிக் இளைஞன்" என்னும் பத்திரிகை, வகுப்புப் பிரச்னையைப் பற்றித் தனது அபிப்ராயத்தைத் தெரிவிக்கையில், "இந்தியாவின் ஜனங்களைப் பார்க்கும்போது, அவர்களெல்லாம் ஒரே

தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்ல முடியாது '' என்று வம்பளந்திருக்கிறது.

புதிய ஆசியக் கொள்கை

1949-50ம் ஆண்டு முடியும்போது, ஆசியாவி லுள்ள சில புதிய நாடுகளைப் பற்றிய சோவியத் அந்நிய நாட்டுக் கொள்கையில் மாறுதலேற்பட்டது போல் தோன்றியது.

ராஜ்ய தூதுகோஷ்டிகள் பரிவர்த்தனை பற்றி ரஷியாவும் பாகிஸ்தானும் நெடுநாளாகச் சச்சரவு செய்து கொண்டிருந்தன. இச்சச்சரவு ஒருவா ருகத் தீர்ந்தது. பாகிஸ்தான் பிரதமர் ஐ ஷை ப் லியாகத் அலிகானுக்கு, மா ஸ் கோ அழைப்பு விடுத்தது.

புதிதாக மலர்ந்த இந்தோனேசியக் குடியரசுக்கு ரஷ்யாவிடமிருந்து ராஜீய அங்கீகாரம் ஒன்று கிடைத்தது. இந்த அங்கீகாரம் வருவதற்குச் சில நாட்கள் முன்புதான், சோவியத் அரசாங்க பத் திரிகை இஸ்வெஸ்தியா ''ஹட்டா-சோகார்னோ கூட்டுக் கட்சி பிற்போக்கானது'' என்று இந்தோ னேசிய ஆட்சியாளரைக் தாக்கி எழுதியிருந்தது.

மாஸ்கோவில் இந்திய ராஜாங்க தூதுவராக இருந்த ஸ்ரீமதி விஜயலெக்ஷ்மி பண்டிட்டுக்கு ஸ்டாலினைப் பார்ப்பதற்கான அனுமதி முதலிலிருந்தே மறுக்கப்பட்டு வந்தது. அந் நிலைமை திடீரென்று மாறியது. இந்தியாவின் புதிய ராஜாங்க தூதர் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன், ஸ்டாலினுடன் நேரில் பேசுவதற்கான அனுமதியைப் பெற்றார்.

இவ்விதமாக ரஷியாவின் அந்நிய நாட்டுக் கொள்கை திடீரென மாறியது ஏன்? இதற்குப் பின்வருமாறு ஒருவகையான விளக்கம் தரலாம். சீனாவில் கம்யூனிஸத்துக்கு வெற்றி ஏற்பட்டது. இதன் விளைவாக ரஷிய-சீன அச்சு உறுதியாயிற்று. அத்துடன் நில்லாமல், தெற்கு ஆசியாவிலே தன் ஆதிக்கத்தைப் பரப்புவது ரஷ்யாவின் திட்டம். இதற்காக முதன் முதலில் இந்தோசீனாவில் போர்ச் சங்கு ஊதியாகிவிட்டது. தவிர அங்குள்ள மற்ற நாடுகளிடையே கூட்டுப் பந்தோபஸ்து உடன்படிக்கைகள் ஏற்படாத வகையில் முட்டுக் கட்டை போடுவதற்கும், நாடுகளினிடையே பிராந்திய ரீதியில் இணைப்புகள் ஏற்படாத வகையில் தடைகள் உண்டாக்குவதற்கும் முயற்சி செய்யப்பட்டது. இவ்விதமெல்லாம் செய்தால்தானே, அங்கு ரஷ்யர்கள் தம் ஆதிக்கத்தை விஸ்தரிக்க

இயலும்? இல்லாவிட்டால் ஆதிக்க விஸ்தரிப்பு வரம்புக்கு அப்பாலுள்ள நாடுகள் தமக்குள் ஒரு வகையான கூட்டுறவை ஏற்படுத்திக் கொள்ளக் கூடுமல்லவா? இத்தகைய சந்தர்ப்பத்தை தவிர்க்கவே, ரஷ்யா அவற்றை உபசரித்து கௌரவிக்க முன் வந்திருக்கிறது. இதனால், மேற்சொன்ன நாடுகள் நமக்குள் உறவாடுவதோ, ரஷ்யாவுக்கு விரோதமாக தம் சக்தியை ஒன்று திரட்டுவதோ பற்றி ஒருவித முயற்சியும் செய்யாமல் தடுக்க முடிந்தது.

மேலிடத்துக் கட்டளை

அந்நிய நாட்டுக் கொள்கையில் மாறுதல் ஏற்பட்டால், கட்சிக் கொள்கையும் மாறுதலடைய வேண்டாமா? ஆகவே, அத்தகைய மாறுதலைத் தான் ஆரம்பத்தில் சொன்னதுபோல் 1950, ஜனவரி 27—ந் தேதியன்று புகாரெஸ்டிலிருந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பிறப்பிக்கப்பட்ட கட்டளை உண்டாக்கியது. 'இந்தியா சீனாவைப் பின்பற்றுதல் வேண்டும்' என்று சீன கம்யூனிஸ்ட் லி—ஷாஓ—சி விடுத்த வேண்டுகோளை காமின்பாரம் 'கட்டளை' எடுத்துக் காட்டியது. சமாதானத்தை கிலைநாட்டல், யுத்த வெறியர்களுடன் போரிடுதல்

ஆகிய இவ்விரு நோக்கங்களையும் கொண்டதொரு தீர்மானத்தை காமின்பாரம் நிறைவேற்றியது. இத் தீர்மானத்தின் பேரில்தான், இந்தியாவில் இன்று "சமாதான" கோரிக்கைகளடங்கிய சுற்ற றிக்கைகளில் கையெழுத்து வாங்கப்படுகிறது. இப் பணியையே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் ஆதிக்கத்துக்குட்பட்ட கழகங்களும் தங்களது முக் கிய நடவடிக்கையாகக் கொள்ள வேண்டுமென்று அக் 'கட்டளை' கூறுகிறது. 'கம்யூனிஸ்ட்' என்ற பத்திரிகையில் இந்தப் புதுக் 'கட்டளை'யை சுருக்க மாகக் கூறியிருக்கிறார்கள். (இப்பத்திரிகை, இந் திய கம்யூனிஸ்ட் கட்சியால் நடத்தப்படுவதாகும்.) 1950, பிப்ரவரி-மார்ச்சில் வெளிவந்த இப்பத்திரி கையின் இதழில்தான் 'கட்டளை'யைப் பற்றிய கீழ்க்கண்ட குறிப்பு காணப்படுகிறது:—

"1. இதர வர்க்கத்தினர், கட்சியினர், குழுவினர், கழகத்தினர் ஆகியவர்களுடன் தொழிலாளர் வர்க் கத்தினர் சேர்ந்து ஒற்றுமையாக இருக்க வேண் டும். ஏகாதிபத்திய வெறியர்களுடனும் அவர்களது கையாட்களுடனும் போராடுவதற்கு, இத்தகைய ஒற்றுமை மிகவும் அவசியம். இந்த ஐக்கிய அணிக்கு தொழிலாளர் வர்க்கமே தலைமை வகித்து, நாடெங்கும் அதைப் பரப்பும். இந்த ஐக்கிய அணி

யின் முன்னணிப் படையிலே கம்யூனிஸ்ட் கட்சி நின்று முன்னேறிச் செல்லும். இக்கட்சியின் கொள்கைகள் மார்க்ஸிசமும் லெனினிசமுமே. மக்களியக்கத்தை மிக ஒழுங்காக நடத்தும் திறமை இக்கட்சிக்கு உண்டு. பாமர மக்களது உணர்ச்சியைக் கிளப்பும் ஆற்றலும் இக்கட்சிக்கு இருக்கிறது. அத்துடன், மக்களது எதிரிகளுடன் எந்த வித சமாதானமும் செய்து கொள்ள ஒப்பாத புரட்சி மனப்பான்மை இக்கட்சியினருக்கு உண்டு. இக்கட்சி புரட்சிக் கலையிலே கைதேர்ந்தது. மக்கள் புரட்சியை முன்னின்று நடத்துவதற்கான சாகசத்தையும் திறனையும் இக்கட்சி நன்கு கற்றிருக்கிறது.

2. தேசிய விடுதலைப் போராட்டத்திலே வெற்றி பெறவேண்டுமானால், கம்யூனிஸ்ட் கட்சி தலைமை வகித்து நடத்தக் கூடியதொரு 'மக்கள் விடுதலைப் படைகளை' அமைக்க வேண்டும். இவற்றை அமைப்பதற்கு நாட்டிலே சூழ்நிலை வாய்ப்பாக இருக்கும் தருணத்தில், இக்காரியத்தை மேற்கொள்ள வேண்டும்.''

இருவகை நடவடிக்கைகள்

காமின்பாரம் கட்டளை இருதலைக் கொள்ளி முறையில் வகுக்கப்பட்டது. பலத்த பிரசாரத்

துடன் "ஐக்கிய முன்னணி"யை நிறுவுவது முக்கிய நோக்கம்; அதை முன்னுக்குக் கொண்டு வந்து காட்டி அதே சமயத்தில் சீன மோஸ்தரில் "மக்கள் விடுதலைப் படை" நிர்மாணிப்பதை பின்னால் வைத்து நடத்த வேண்டும். முதல் நடவடிக்கை வெறும் பிரசாரமே தான். அதன் விளைவாக உருப் படியான ஐக்கிய அணி ஒன்றும் அமையப் போவ தில்லை. ஆனாலும் 'ஐக்கிய முன்னணி' என்னும் போர்வையின் கீழ், இரண்டாவது நடவடிக்கை யைத் தீவிரமாக நடத்த வேண்டும் என்பது அவர் கள் திட்டம்.

"இந்தியாவில் இப்பொழுதுள்ள ஆட்சியை கவிழ்ப்பதற்குரிய புரட்சிகரமான சூழ்நிலை அந் நாட்டில் ஏற்பட்டிருந்துங் கூட, அதைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்வதற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பெரிதும் தவறிவிட்டது" என்று காமின் பார்ம் 'கட்டளை' இடித்துக் காட்டி, "இந்திய கம்யூ னிஸ்ட் கட்சியின் பெரிய சாதனை இதுவே" என வும் எள்ளி நகையாடியது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் இத் 'தவறு'களை, தலைகுனிந்து ஒப்புக் கொண்டார்கள். அதுமட்டுமா? 'கம்யூ னிஸ்ட்' பத்திரிகையிலும் அதைப்பற்றி எழுதினர். கட்சியின் தலைமைப் பதவியை பி. ஸி. ஜோஷி

எங்கு அடித்துக்கொண்டு போய்விடுவாரோ எனப் பயந்து, ரணதேவ், "நான் அக்குற்றங்களைப் புரிந்த தாக ஒப்புக் கொள்கிறேன்" என்று கூறி, அதே நேரத்தில், "இப்புதிய வேலைத் திட்டத்தை சரிவர நிறைவேற்றத் தயாராயிருக்கிறேன்" என்றும் அவர் உறுதி கூறினர். "மக்களை முட்டாள்களாக்கும் காந்தியக் கொள்கைகளை"ப் பரப்பும் காங்கிரஸ் தலைவர்களோடும், சோஷலிஸ்ட் தலைவர்களோடும் தீவிரமாக எதிர்த்துப் போராடத் தீர்மானித்து விட்டதாகக் கூறப்பட்டது. "காங்கிரஸ் ஆட்சியாளர் களின் எதேச்சாதிகார அடக்குமுறைக் கொள் கையை விரிவான முறையில் தீவிரமாக எதிர்க்க அவர்கள் திட்டமிட்டார்கள். பணக்கார வர்க்கத்தி லுள்ள சில குறிப்பிட்ட வகுப்பினரை ஐக்கிய அணி யில் தாற்காலிக சகாக்களாகச் சேர்த்துக் கொள்ள லாமாம். ஆனால், இவர்களை "ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் பாசறையிலே" நிரந்தர அல்லது அந்த ரங்க அங்கத்தினர்களாகச் சேர்க்கக் கூடாதாம்.

வெறும் பாசாங்கு !

மேற்கூறிய 'கட்டளை'க் குறிப்புகளிலிருந்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இனிமேல் எத்தகைய உபாயங்களைக் கையாளுமென்பது நன்கு தெரிகிற

தல்லவா? இப்பொழுதோ கம்யூனிஸ்டுகளுக்கும் மக்களுக்குமிடையே ஒருவித தொடர்புமில்லை. இச் சூழ்நிலையை மாற்றுவதற்காக, கட்சியின் திட்டங்களும் கொள்கைகளும் தளர்த்தப்பட்டிருப்பதாக போலி நாடகம் நடத்தப்படுகிறது. "இக்கட்சியில் எல்லாரும் சேரலாம். பயமில்லை" என்ற பிரசாரமும் நடக்கிறது. இவ்வாறு இவர்கள் வீசும் வலையில், மனக்குழப்பமுற்ற அறிஞர்களும் அரசியல் பச்சோந்திகளும் சிக்குவார்களெனக் கருதப் படுகிறது. அதுவுந் தவிர, இம்மாதிரியான சூழ்ச்சியின் காரணமாக, மத்திய சர்க்கார், ராஜ்ய சர்க்கார்கள் ஆகியோர் இவர்கள் மீது எடுக்கும் நடவடிக்கைகள் சிறிது குறையலா மெனவும் கருதப்படுகிறது. ஒரு வேளை, கம்யூனிஸ்ட் கட்சி சட்ட வரம்புக் குட்பட்டு நடக்கும் கட்சியென சர்க்காரிடம் அங்கீகாரம் வாங்கி, அடுத்த வருடத்தில் (1951) நடக்கும் பொதுத் தேர்தல்களிலே போட்டியிட்டு, அதன் விளைவாகச் சட்ட சபைகளிலும் புகுந்து விடலா மென நினைத்தே இக்கட்சி இத்தகைய சூழ்ச்சியைச் செய்திருக்கவும் கூடும். இப்புதிய கொள்கை இந்தியாவில் பலனளிக்கும் போது, இந்தோ சீனு, தாய்லாந்து, பர்மா, மலேயா முதலியவை ஆக்கிரமிப்புக்கும், பகிரங்க பயமுறுத்தல்களுக்கும் இலக்

காகி விடுமெனக் கருதப்படுகிறது. இவ்விதம் இவை கள் பலியான பிறகு, இந்தியாவின் மீது கண்ணோட்டம் விழும். அச்சந்தர்ப்பத்தில், 'தாற்காலிகமாக' நேச உறவு கொண்டிருந்தவர்களின் தொடர்பு ரத்து செய்யப்படும்; ஐக்கிய அணி நடவடிக்கை காற்றில் பறக்க விடப்படும்; மறைவிலே நிறுவப்பட்டிருந்த மக்களது விடுதலைப் படைகள் வெளிப் படையாக நேர்முகத் தாக்குதலில் இறங்கி, இந்தியாவின் விடுதலைக்காகப் போராடும்.

இம்மாதிரியான சாகசச் சூழ்ச்சி வெற்றி பெறுமா என ஆச்சரியமுறலாம். அவ்விதமிருப்பினும் இங்கு ஒரு உண்மையை எடுத்துக் கூற வேண்டியிருக்கிறது. அதாவது, இந்திய மக்களில் அநேகரது மனதில் கம்யூனிஸத்தைப் பற்றி ஒரே குழப்பமடைந்த கற்பனைதான் இன்னும் நிலைத்து நிற்கிறது. இதனால் அவர்கள் எளிதில் ஏமாற்றப் படுகிறார்கள். கீழே குறித்திருக்கும் உதாரணத்தைக் கவனித்தால், இதனாலேற்படும் அபாயத்தின் தன்மை தெளிவாகும். உத்தர பிரதேச ராஜ்யத்து உள்நாட்டு இலாகா மந்திரி கனம் ஸ்ரீ லால் பகதூர் சாஸ்திரி, கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஓர் "நேர்முக அழைப்பு" விடுத்தாராம். அதில் அவர் இரகசியமாகப் பதுங்கியிருந்து பலாத்கார முறைகளைப் பின்

பற்ருமல், ஜனநாயக முறையில் அமைதி யாக செயலாற்ற இவர்கள் முன்வருவார் களாஞல், இக்கட்சியினர் மீது விதிக்கப்பட் டுள்ள சகல தடைகளும் அகற்றப்படுவதுடன், நேர்முகமாக அரசியல் துறையிலே இவர்கள் பங்கெடுப்பதற்கான சகல சந்தர்ப்பங்களும் அளிக் கப்படும்" எனக் கூறியிருக்கிருராம். இத்தகவலை லக்ஷ்மணபுரியிலிருந்து ஏப்ரல் 13உ யு. பி. ஐ. செய்தி ஸ்தாபனம் வெளியிட்டிருக்கிறது. இவர் கூறியதெல்லாம் சரிதான். ஆனல் நாய் வாலை நிமிர்த்த முடியுமா? கம்யூனிஸ்டு முறைகளைக் கற்றுணர்ந்த அறிஞர் ஒருவர் குறிப்பிடும்போது, "ஜனநாயகத்தைக் கவிழ்க்கும் நோக்கத்தையும் பலாத்கார முறைகளையும் கம்யூனிஸ்டுகள் உண் மையாகவே உதறியெறியும்போது, ஆண்களும் குழந்தைகளைப் பெறத் தொடங்கிவிடுவார்கள்!" என்று கூறினர்.

சோஷலிஸ்ட் கட்சியின் முயற்சி வினை கதை

இப்புதிய கம்யூனிஸ்டுகள் வீசிய வலையில் சோஷலிஸ்ட் கட்சியோ, அதை நடத்திவரும் ஸ்ரீ ஜெயபிரகாஷ் நாராயணரோ சிக்குவார்களென்று எதிர்பார்ப்பதற்கில்லை. ஏனெனில், முன்பே இவர்

கள் 'ஐக்கிய அணி' என்ற வலை வீச்சில் சிக்கி அல்லலுற்றிருக்கிறார்கள். ஆனால், பம்பாயிலுள்ள தொழிலாளர்—விவசாயி கட்சி, இவ்வலை வீச்சில் சிக்கிவிட்டது. இதேபோன்று, உதிரியாகவும் பணக் குழப்பமடைந்து மிருக்கிற இடது சாரிகள் இந்த கைய வலை வீச்சில் எளிதில் சிக்கிவிடக்கூடும்.

1935 முதல் 1940 வரை, சோஷலிஸ்டு கட்சி கம்யூனிஸ்டு கட்சியுடன் சேர்ந்து ஐக்கிய அணி ஒன்றை அமைக்க வெகுவாகப் பாடுபட்டது. அவ்விதம் பாடுபட்டதனால் என்ன விளைந்தது என்பதை, கட்சியின் பொதுக் காரியதரிசி ஜெயபிரகாஷ் நாராயணர், 1941ல் அவரது கட்சி பிரசுரித்த நூலொன்றில் வெளியிட்டிருக்கிறார், அச்சிறு நூலின் தலைப்பு "சோஷலிஸ்ட் ஐக்கியமும், காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியும்" என்பதேயாகும். அந்நூலில், இவ்விரு கட்சிகளிடையே ஒற்றுமையையுண்டாக்க ஜெயபிரகாஷ் செய்த பலத்த முயற்சிகள் பலவற்றை மிகத் தெளிவாக, அவரே எடுத்துக்கூறியிருக்கிறார். அப்பொழுது கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராயிருந்த பி. சி. ஜோஷியைத் தான் நம்பினது தப்பானதென்று, ஜெயபிரகாஷ் தன்னையே குறை கூறிக்கொள்கிறார். பி. சி. ஜோஷியோ இவரை ஏமாற்றி, இவரது கட்சியை

யும் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதிக்கத்துக்குள்ளே உட்படுத்த எண்ணினர். இச் சம்பவம் நேர்ந்ததற்கு தாமே எல்லாப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டதாக ஜெயபிரகாஷ் கூறியுள்ளார். மேலும் அவர் " இச் சம்பவம் இந்திய சோஷலிஸ்ட் இயக்கத்தின் சரித்திரத்திலேயே துக்ககரமான கட்டமாகும். கம்யூனிஸ்ட் கட்சி போன்ற ஒரு கட்சியுடன் சேர்ந்து ஐக்கிய அணி அமைப்பதென்ற கருத்தே முற்றிலும் தவருனது. இனிமேல் இம்மாதிரியான சம்பவம் நிகழவே கூடாது " என்று வற்புறுத்தியிருக்கிருர். ஜெயபிரகாஷ், அசோக மேத்தா போன்ற சோஷலிஸ்டு தலைவர்கள் கம்யூனிஸ்ட் வலைவீச்சில் தாமாகவே மீண்டும் வலிய வந்து சிக்குறவே மாட்டார்களென்றலும், அவர்களது கட்சியினரில் போதிய அனுபவமற்ற சிலர் மீண்டும் அவ்வலையில் சிக்குவதற்கு வழிதேட மாட்டார்களா? ஏனெனில், கம்யூனிஸ்ட் ஆதிக்கத்துக்குட்பட்ட (A. I. T. U. C.) அகில இந்திய தொழிற்சங்கம் காங்கிரஸ் மே தின விழாவைக் கொண்டாடியபோது, தமது கட்சியும் அவ்விழாவில் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும் என்று தமது கட்சியின் கட்டுப்பாடுக்கு முரணுக விவாதித்த சோஷலிஸ்ட் அங்கத்தினர் ரூய்க்கார், சமீபத்

தில் நடைபெற்ற ஹைதராபாத் மகாநாட்டில் மீண்டும் ஹிந்தி மஸ்தூர் பஞ்சாயத்துத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்! இவரைப்போன்ற கம்யூனிஸ்ட் பற்றுள்ள சோஷலிஸ்டுகள் இருக்கும் போது, சோஷலிஸ்டுத் தலைவர்கள், மறுமுறையும் கம்யூனிஸ்ட் வலைக்குள் சிக்கிக்கொள்ள மாட்டார்கள் என்பதில் என்ன நிச்சயமிருக்கிறது? அதுவும் தவிர, ருய்க்காரைப் போன்றவர்களை சோஷலிஸ்ட் கட்சியிலிருந்து விலக்க முடியவில்லையே? இதையும் ஜெயபிரகாஷே ஓரிடத்தில் எடுத்துக் கூறியிருக்கிறார்.

இப்புதிய கம்யூனிஸ்ட் திட்டம் தரப்போகும் தொல்லையை எவ்வாறு ஜனநாயக ரீதியில் தவிர்க்க முடியும்? முதலாவதாக, நோய் எங்கிருந்து பரவுகிறதென்பதைத் தெரிந்து கொள்ளாது நோயின் குறிகளை மட்டும் குணப்படுத்துவதில் பிரயோசனமில்லை; அதேபோல், கம்யூனிஸ்டுகள் யார்? அந்நிய நாட்டு சர்வாதிகார ஆட்சிக்கு அடிபணிந்து, அதன் ஐந்தாம் படையாக இந் நாட்டில் உழைக்கும் இக் கோஷ்டியாரும் அவர்களுடைய சகாக்களும் யார்? என்பதை நாம் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். சர்க்கார், இதுசம்பந்தமாகத்தொடர்ந்து பிரசாரம் செய்யவேண்டும். அத்துடன் அரசாங்

கம் மக்களிடத்திலே, பூரண நம்பிக்கை வைத்து, பொதுஜனங்களுக்கு இக் கம்யூனிஸ்ட்களின் சதிச் செயல்களைத் தெளிவாக எடுத்துக்கூற வேண்டுவதும் மிக அவசியம். இந்தியாவிலே கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து அவர்களின் அக்கிரமச்செயல்களைத் தடுக்கவேண்டுமானால், அதற்குள்ள மிகச் சிறந்த வழி, கூட்டுப் பாதுகாப்புக்கான ஏற்பாடுகளைச் செய்வதே யாகும். அதாவது, எல்லாப் பிராந்தியங்களுக்கும் ஏற்றவகையில் பந்தோபஸ்து அமைக்க எல்லோரும் முன்னின்று உழைக்க வேண்டியது அவசியம்.

[—By courtesy, National Press Syndicate, India]

C. P. & P. H. Madras. L